பக்கங்கள்: பத்து

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 10 வெள்ளிக்கிழமை [27-08-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:23 5

# 20 கிலோ வெடிகுண்டுகள் நேற்று மடுல்சீமைதோட்டத்தில்கண்டுபிடிப்பு

## மட்டக்களப்புப் பெண் உட்பட ஐவர் கைதாகினர்

கொழும்பு, ஓக. 27

பதுளை மாவட்டத்தில் உள்ள மடுல்சீமைத் தோட்டப் பகுதியில் நேற்றுக்காலை திடீர் சோதனை நடத்திப பொலீஸார் 20 கிலோ நிறையுள்ள வெடிகுண்டுகளைக் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட வெடிகுண்டுகளில் அனேகமானவை நேரம் கணித்து வெடிக்க வைக்கும் குண்டுகள் எனத் தெரிவிக்கப்பட்டது.

வெடிகுண்டுகள் மீட்கப் பட்டதைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் 5 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மட்டக்களப்பைச் சேர்ந்த பெண் என்றும்—

மட்டக்களப்பில் இருந்து பதுளைக்குக் குண்டுகளைக் கொண்டு வந்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயேதாம்

[10ஆம் பக்கம் பார்க்க]

## ஜே. ஆரின் கண் ஜப்பானியருக்கு

கொழும்பு, ஓக. 27

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஒரு கண் 89 வயதான ஜப்பானியப் பெண் ஒருவருக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

ஜே ஆர். உயிரிழக்கும் போது தனது இரு கண்களில் ஒன்றை இலங்கையர் ஒருவருக்கும் மற்றைய கண்ணை ஜப்பானியர் ஒருவருக்கும் பொருத்துமாறு தெரிவித்திருந்தார் என டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதற்கமையவே அவரது ஒரு கண் தற்போது ஜப்பானியப் பெண் ஒருவருக்குப் பொருத்தப்பட்டுள்ளது.

(இ-3)

# ரணில்-பீரிஸ் சந்திப்பு இழுபறி நிலையில்!

## பயனற்றது என ஐ.தே.க. வட்டாரங்கள் கருத்து

கொழும்பு, ஓகஸ்ட் 27

இனப்பிரச்சினை தீர்வு விவகாரம் தொடர்பாக நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவும் சந்திப்பது உடனடியாகச் சாத்தியமற்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இவர்கள் இருவரும் சந்தித்துப் பேச இருந்தனர். எனினும் அது இடம்பெறவில்லை. தற்பொழுது இம் மாதம் 30 ஆம் திகதி இந்தச் சந்திப்பு நிகழ இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அதுவும் சாத்தியப்பட மாட்டாது என்று தக

[10ஆம் பக்கம் பார்க்க]

## சர்வமத பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக. 27

இனப்பிரச்சினையைமுடிவுக்குக் கொண்டுவரவும் மக்கள் அமைதியாகவும், சுதந்திரமாகவும் வாழவும் தெய்வ ஆசிவேண்டி யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வெள்ளிக்கிழமை தோறும் நடத்திவரும் சர்வமதப் பிரார்த்தனையின் மூன்றாவது வார நிகழ்வுகள் இன்று பிற்பகல் 5.00 மணிக்கு பல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 1,250 பயணிகளுடன் லங்காமுடித்த வருகிறது

திருகோணமலை, ஓக 27

திருகோணமலையில் இருந்து ஆயிரத்து 250 பயணிகளுடன் லங்கா முடித்த கப்பல் நாளை சனிக்கிழமை மாலை காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும் என திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடபகுதிக்குப் பயணம் செய்வதற்கென தமது பிரதேச செயலகத்தில் பதிவு செய்தவர்களில் 850 பேரும் வவுனியா மற்றும் மன்னார் அகதி முகாம்களில் வசித்த 400 பேரும் நாளை கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

### உக்கிளாங்குளம் சம்பவம்:

## முகாமை மீண்டும் அமைக்கும் நடவடிக்கையில் ரெலோ

வவுனியா, ஓக. 27

உக்கிளாங்குளத்தில் நேற்று முன்தினம் தீயிட்டுக்கொளுத்தப்பட்ட தமது முகாமை மீண்டும் அதே இடத்தில் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ரெலோ வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

தமது முகாமில் உள்ள உடைமைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாலும், முகாம் அடித்து நொறுக்கப்பட்டதாலும் ஏற்பட்ட சேதம் ரூபா 10 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை உக்கிளாங்குளம் மற்றும் வேப்பங்குளம் பகுதிகளில் நேற்றைய தினம் மக்கள் மத்தியில் ஓரளவு பீதி நிலவியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7-164)

## தொலைத்தொடர்பு சேவைகள் பாதிப்பு

வவுனியா, ஓக. 27

வவுனியாவில் இருந்து மன்னாருக்கான தொலைத் தொடர்புச் சேவைகள் கடந்த ஒரு வார காலமாகச் செயலிழந்துள்ளன என்று வவுனியாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொலைத்தொடர்புச் சேவைகள் பாதிக்கப்பட்டதுக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

[இ-7-164]

### நல்லூர் உற்சவத்தையொட்டி

## குடாநாடு முழுவதும் ஊரடங்கு நேரம் தளர்வு

யாழ்ப்பாணம், ஓக. 27

நல்லூர் கந்தசாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தையொட்டி யாழ். குடாநாடு முழுவதும் ஊரடங்கு நேரம் தளர்த்தப்பட்டுள்ளதாக யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நடவடிக்கைத் தலைமையகம் செய்திக் குறிப்பொன்றை நேற்று வெளியிட்டது.

நல்லூர் உற்சவத்தில் பங்குபற்றும் பக்தர்களின் நன்மை கருதி இன்று வெள்ளிக்கிழமை முதல் அடுத்த மாதம் 12 ஆம் திகதி வரை யாழ். குடாநாடு முழுவதும் ஊரடங்கு இரவு 9-30 மணி முதல் அதிகாலை 4 மணி வரை அமுல் செய்யப்படும் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி இதுவரை யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் மட்டுமே ஊரடங்கு நேரம் தளர்த்தப்பட்டிருந்தது. தற்பொழுது இது குடாநாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

(இ-6)

## சோனியா போட்டியிடுவதை எதிர்த்து நீதிமன்றில் மனு

சென்னை, ஓக. 27

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி தேர்தலில் போட்டியிடுவதை தடுக்கக் கோரி ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொதுநலன் கருதி தமிழ்நாடு தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த சரவணன் என்பவர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

ஒரு நாட்டைச் சேர்ந்தவர் மற்றொரு நாட்டை ஆளும் போது அந்த நாடு அழிந்துபோன வரலாற்றுச் சம்பவங்கள் இருக்கின்றன என்று அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

(இ-6)

## பஸ் கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 27

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட உள்ளன.

சாதாரண பஸ் கட்டணங்கள் 15 சதவீதத்தாலும் சொகுசு பஸ் கட்டணங்கள் 25 சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட இருப்பதாகப் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

இதன்படி குறைந்தபட்ச பஸ் கட்டணமான இரண்டு ரூபா அதிகரிக்கப்படமாட்டாது. 2-50 சதத்திலிருந்து 5ரூபா வரையான கட்டணங்கள் 50 சதத்தினால் அதிகரிக்கப்படும்.

(இ-6)

## செஞ்சிலுவை கப்பல் மூலம் குமார் வர வாய்ப்பு இல்லை

கொழும்பு, ஓக. 27

செம்மணிப் புதை குழி விவகாரம் குறித்த விசாரணைகளின்போது காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் சார்பாக ஆஜராகச் சம்மதித்த தமிழ் காங்கிரஸ் தலைவரும் சட்டத்தரணியுமான குமார் பொன்னம்பலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் யாழ். வருவதற்கான சாத்தியம் இல்லை எனத் தெரிகிறது.

[10 ஆம் பக்கம் பார்க்க]

### தமிழர் நல்வாழ்வுக்காக

## விசுவமடுப் பகுதியில் தீவட்டி ஊர்வலம்

வவுனியா, ஓக. 27

இராணுவக் கட்டுப்பாடற்ற விசுவமடுப் பகுதியில் தீவட்டி ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

தமிழ் மக்கள் அமைதியாகவும் சுதந்திரமாகவும் வாழ நல்லதோர் சூழ்நிலை உருவாக வேண்டுமெனக்கோரியே தீவட்டி ஊர்வலம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விசுவமடுச்சந்தியில் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு ஆரம்பமான இந்த ஊர்வலம் இரவு 8 மணி அளவில் விசுவமடு அரசினர் அ. த. க. பாடசாலையைச் சென்றடைந்ததுடன் முடிவுற்றது.

விசுவமடுப் பகுதியிலுள்ள பெண்கள் அமைப்புக்கள் இந்த ஊர்வலத்தை ஒழுங்கு செய்திருந்தன.

(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி

எமது குடும்ப நண்பர்
திரு கந்தையா கனகசபை
அவர்களின் ஏக புத்திரி

### கனகசபை திருமகள்

அவர்களின் அகால மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

த. வேலாயுதம் குடும்பத்தினர்.
(சட்டத்தரணி)

சாவகச்சேரி. (68516)

## கண்ணீர் அஞ்சலி

பேராதனைப் பல்கலைக்கழக முதலாம் வருட
பொறியியற் பீட மாணவன்
க. முருகவேள்
அவர்களின் அன்புத் தங்கை

### கனகசபை திருமகள்

[மீசாலை]

அவர்கள் 25-08-99 இல் அகால மரணமானதை ஒட்டி எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பேராதனை பொறியியற்பீட
முதலாம் வருட மாணவர்கள்.

(68520)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி முருகேசபிள்ளை

7 ஆம் கட்டையடி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த மலேயன் பென்சனர் சின்னத்தம்பி முருகேசபிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும் மகேஸ்வரி, இராஜரட்ணம் (ஒய்வுபெற்றஉத்தியோகத்தர், மின்சாரசபை), குணரட்ணம் (நில அளவையாளர், லண்டன்), அரியமலர், பரமானந்தம், சிவநேசன் ((பொறியியலாளர், லண்டன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராஜா (ஒய்வுபெற்ற உத்தியோகத்தர், இலங்கை மத்தியவங்கி), இந்திராணி, பிறேமாவதி, சத்தியவதி, தியாகேஸ்வா (பொறியியலாளர் லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயக்குமார் (பிரான்ஸ்), பாலகுமார் (கட்டடக் கலைஞர், லண்டன்), பிருந்தா, உஷாந்தி, தவானி, பிந்தியா (லண்டன்), தர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (27-08-99) மதியம் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராஜரட்ணம், பரமானந்தம்
(மகன்மார்)

7 ஆம் கட்டையடி,
சண்டிலிப்பாய். (68519)

### செல்வி திருமகள் கனகசபை

(சாவகச்சேரி இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி)

மீசாலை வடக்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை, விமலாதேவி (நில அளவையாளர்) தம்பதிகளின் ஏகபுத்திரி செல்வி திருமகள் கனகசபை 1999 – 08 – 25 இல் அகால மரணமானார்.

அன்னார் முருகவேள் (பொறியியல் பீட மாணவன், பேராதனை), ஸ்ரீஸ்கந்தவேள் (பொறியியல் பீட மாணவன், மொறட்டுவ), இளங்கோவேள் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), எழில்வேள் (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன்) ஆகியோரின் சகோதரியும், சோமசுந்தரம், அன்னப்பிள்ளை (முன்னாள் கிளை மேற்பார்வையாளர், சாவகச்சேரி ப. நோ. கூ. ச), வேலுப்பிள்ளை, நாகேஸ்வரி (கனடா), கந்தசாமி, ஹேமலதா (முன்னாள் இ. போ. ச. டிப்போ பரிசோதகர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்), பாலசுப்பிரமணியம், கமலாதேவி (தட்டெழுத்தாளர், A. C. C. D காரியாலயம், யாழ்ப்பாணம்), இரத்தினேஸ்வரன் சிவயோகராணி (களஞ்சியப் பொறுப்பாளர், வயோதிபர் இல்லம், மந்துவில் றோ. க. பாடசாலை ஆசிரியர்) ஆகியோரின் பெறாமகளும் வா. சிதம்பரப்பிள்ளையின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 1999 - 08 – 27 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், சகமாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ. மோகன[illegible]
(ஆசிரியர், மட்டுவில் ம. வி)

மீசாலை வடக்கு,
மீசாலை. (68514)

# உள்ளூராட்சித் தலைவர்களுக்கு மேலும் 10 பிக்அப் வாகனங்கள்

## நேற்றைய வைபவத்தில் ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 27

யாழ். குடாநாட்டில்மேலும் பத்து உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்களுக்குப் பிக்அப் வாகனங்கள் விரைவில் வழங்கப்படும்.

மேற்கண்டவாறு வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா கூறினார்.

நேற்றுக் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற ஏழு பிரதேச சபைகளின் தலைவர்களுக்கு பிக்அப் வாகனங்களைக் கையளிக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனா, 51 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் என். ஆர். மாறம்பே, யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஸ்ணசாமி ஆகியோரும் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை, சங்கானை, மானிப்பாய், உடுவில், ஊர்காவற்றுறை, கோப்பாய், நல்லூர் ஆகிய பிரதேசசபைகளின் தலைவர்களுக்கு வாகனங்களைக் கையளித்து மாகாண ஆளுநர் மேலும் உரையாற்றும் போது:

யாழ். மாவட்டத்தில் மேலும் பல அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம் இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டு மீண்டும் விரைவில் யாழ்ப்பாணம் வருவேன் — என்றார்.

வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் மா. செல்வராஜாவும் இந்த வைபவத்தில் உரையாற்றினார்.

சுமார் ஒரு மணித்தியாலம் வரை இடம்பெற்ற இந்த வைபவம் முடிவடைந்ததும் மாகாண ஆளுநர் உடனடியாக கொழும்பு திரும்பிவிட்டார்.

(இ-173-5)

## 3 ஆயிரம் தொன் சீனியை கப்பலில் எடுத்துவர முயற்சி

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் சீனி விலையை கட்டுப்படுத்தும் நோக்குடன் கொழும்பிலிருந்து மூவாயிரம் மெற்றிக் தொன் சீனியை கப்பல் மூலம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் யாழ். செயலகத்தினால் மேற்கொள்எப்பட்டுவருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். செயலக களஞ்சியத்தில் தற்பொழுது இரண்டு மாதங்களுக்குத் தேவையான சீனி கையிருப்பில் இருப்பது குறிபபிடத்தக்கது.

வர்த்தக நிலையங்கள் பலவற்றில் சீனி பதுக்கப்பட்டிருப்பதால் சீனியின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது சீனி கிலோ 45 ரூபா வரை விற்பனைசெய்யப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் யாழ். செயலகத்தினால் வழப்பட்டுள்ள பழுப்பு நிறச் சீனி பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு இரண்டு கிலோ வீதம் கிலோ 26 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

(இ-5-17)

## திருமறைக் கலாமன்றத்தின் தமிழ் விழா இன்று ஆரம்பம்

அரியாலை, ஒக. 27

திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ் விழா இன்று ஆரம்பமாகி நாளையும் நாளை மறுதினமும் தொடர்ந்து நடைபெறும்.

தினமும் பிற்பகல் 5.30 மணிக்கு மன்ற அரங்கில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இன்று நடைபெறும் நிகழ்வுக்கு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமை வகிப்பார்.

சிறப்புரையை கலாநிதி எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்துவார். தொடர்ந்து ''ஈழத்தில் தமிழ்க் கவிதை'' என்ற தலைப்பில் கருத்துக்களம் இடம்பெறும்.

பேராசிரியர் ஏ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்துக்களத்தில் ''சீர்குலைக்கும்'' என்ற பொருளில் செல்வி மாதவி சுந்தரம்பிள்ளை, ஜோண்சன், ராஜ்குமார் ஆகியோரும் ''சீர்குலைக்காது'' என்ற பொருளில் ஆர். திலகரட்ணம், பி. எஸ். அல்பிரட் ஆகியோரும் வாதாடுவார்கள்.

தொடர்ந்து ''புயலான பூவை'' என்ற நாடகம் இடம்பெறும்.

அத்துடன் இன்று காலை 10.00 மணிக்கு கிராமியப் பாடல்கள் அடங்கிய ''செம்மணல்'' ஒலி நாடாவும் வெளியிட்டுவைக்கப்படும்.

(இ-17)

## வழக்கில் ஆள்மாறாட்டம் செய்தவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஒக. 27

சட்டவிரோதமாகக் கள் விற்பனை செய்தது தொடர்பான வழக்கில் ஆள் மாறாட்டம் செய்த நபர் ஒருவரை அடுத்தமாதம் 6 ஆம் திகதி வரைவிளக்கமறியலில்வைக்குமாறு யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவரான அல்பிரட் றெஜினோல்ட் (ஞானவைரவர்கோயிலடி நல்லூர்) என்பவருக்குப் பதிலாக அதே இடத்தைச் சேர்ந்த இராஜதுரை ராஜகுலேந்திரன் என்பவர் ஆஜரானார்.

இவ்வழக்கில் ஆள் மாறாட்டம் செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சம்பந்தப்பட்ட நபரைக் கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் தடுப்புக்காவல் உத்தரவைப் பிறப்பித்தார்.

(ஐ-5)

நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று
காதல் இளவரசன் விஜய்
தேவயானி, ரம்பா
மணிவண்ணன் நடித்த
நினைத்தேன் வந்தாய்
காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
(68392)

ராஜா
யாழ்ப்பாணம்
பிரசாந்த் — ஐஸ்வர்யா
நாசர் நடித்த
ஜீன்ஸ்
10-30, 2-30
(புதிய நேரம்)
(இ/8561)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
அஜித், தேவயானி,
பார்த்தீபன்
நடித்த
நீ வருவாய் என
(புதிய நேரம்)
காட்சிகள் 10-30, 2-30
(68360)

மங்களகரமான ஆரம்ப விழா
இன்று (27-08-99) வெள்ளிக்கிழமை பகல் 12.15
முதல் 1.15 வரையுள்ள சுபவேளையில்
யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இல. 87 இல்
N.S.A. எலெக்ரோனிக்ஸ்
என்னும் புதுக் கடை ஆரம்பித்து வைக்கப்படும்.
★ T.V. வகைகள், டெக் வகைகள்
★ ஆண், பெண் கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள்
★ ஒகன், கிற்றார், மலோடிக்கா வாத்தியக்கருவிகள்
★ கரப்பந்து, உதைபந்து, கிரிக்கெட் விளையாட்டுப் பொருள்கள்
★ மின்பாவனைப் பொருள்கள் மணிக்கூட்டுப் பற்றரிகள்
அனைத்தையும் ஒரே இடத்தில்
மலிவாகவும் தரமாகவும் பெற்றுக் கொள்ளுங்கள்!
N.S.A. எலெக்ரோனிக்ஸ்
ஸ்தாபனத்தார்
87, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி/8663)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில் கிளின்ரனின் தலைக்கு விலை பேசும் ஆப்கன் அறிஞர்

இஸ்லாமாபாத், ஒக. 27

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் தலையைக் கொய்து வருபவருக்கு 50 லட்சம் ஆப்கானிய நாணயங்கள் பெறுமதியான சன்மானம் வழங்கப் போவதாக ஆப்கானிஸ்தானிய அறிஞர் ஒருவர் கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் பெஸாவார் நகரில் உள்ள அப்துல் றஹீம் முஸ்லிம் தோஸ்த் என்ற அறிஞரே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''யாராவது பில் கிளின்ரனைக் கொன்றால் 5 மில்லியன் ஆப்கானிய நாணயங்களை (113 டொலர்) வழங்குவேன். 5 மில்லியன் ஆப்கானிப நாணயங்கள் ஒந பெரிய தொகை அல்ல. ஆனால் எனக்கு அமெரிக்க ஜனாதிபதியின் தலையை அதைவிட மேலான பெறுமதியில் கணிப்பிடக் கூடியதாக இல்லை. அமெரிக்கா ஒஸாமா பின் லேடனுக்கு 5 மில்லியன் டொலர்களை விலையாகச் செலுத்தினால் நாமும் 5 மில்லியன் ஆப்கானிய நாணயங்களை கிளின்ரனின் தலைக்காக செலுத்துவோம் என்று அவர் கூறியதாக ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

[ஐ-ரி]

# பூகம்பம் பாதித்த பகுதியில் ஒகலனின் சிறைச்சாலை

## அவர் காயமின்றித் தப்பினார்

அங்காரா, ஒக. 27

துருக்கியை உலுக்கிய கடும் பூகம்பத்தின் போது பூகம்பம் பாதித்த பகுதியில் சிறை வைக்கப்பட்டிருக்கும் குர்டிஷ் கெரில்லாத் தலைவர் அப்துல்லா ஒகலன் காயம் எதுவும் இன்றி உயிர்தப்பியுள்ளதாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் ஒகலன் தீவு ஒன்றில் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்.

அப்பகுதியில் பூகம்ப அழிவுகள் ஏற்பட்ட போதிலும் ஒகலனுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்பதை அவரது சட்டத்தரணிகள் உறுதி செய்துள்ளனர்.

இதேவேளை —

ஒகலன் விடுத்த வேண்டுகோளை அடுத்து அவரது கெரில்லா இயக்க போராளிகள் துருக்கிய பகுதியில் இருந்து வாபஸ்பெறத் தொடங்கி உள்ளனர்.

(ஐ)

## சுதந்திரம் வேண்டுமா?

# கிழக்குத் திமோர் மக்கள் திங்கட்கிழமை வாக்களிப்பு

டில்லி, ஒக. 27

இந்தோனேசியாவிடம் இருந்து கிழக்குத் திமோருக்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமா என்பது தொடர்பாக கிழக்குத்திமோர் மக்களின் விருப்பத்தை அறிந்து கொள்வதற்கான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு எதிர்வரும் திங்களன்று நடைபெறவுள்ளது.

கிழக்குத்திமோர் தொடர்ந்தும் இந்தோனேசியாவுடனேயே இணைந்திருக்க வேண்டும் எனக்கோரும் கட்சிக்கும் — சுயாட்சி வழங்கப்பட வேண்டும் எனக்கோரும் கட்சியினருக்கும் இடையே இந்த வாக்கெடுப்பு தொடர்பாக இணக்கம் காணப்பட்ட போதிலும் இரு கட்சிகளினதும் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜகார்த்தா முன்வைத்துள்ள சுயாட்சித் திட்டத்துக்கு ஆதரவானோர் தலைநகர் டில்லியில் நேற்று முன்தினம் பல்லாயிரக்கணக்கில் திரண்டு பேரணி ஒன்றை நடத்தினர்.

திங்களன்று வாக்களிப்பு இடம்பெறும்போது வன்செயல்கள் நடைபெறலாம் என ஐ. நா. கண்காணிப்பாளர்கள் கவலை கொண்டுள்ளனர்.

தவிர்க்கமுடியாத நிலைமை ஏற்படுமிடத்து சில இடங்களில் வாக்கெடுப்பை ஒத்தி வைக்கவேண்டி வரலாம் என்று ஐ. நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ)

## விஜயம்

ஜெருசலேம், ஒக. 47

அடுத்தவாரம் இடம்பெறவுள்ள அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மெடலின் அல்பிரைட்டின் மத்தியகிழக்கு விஜயத்திற்கு முன்பு அவரை இஸ்ரேலிய, பலஸ்தீன தூதுக்குழுவினர் சந்தித்துப் பேசவுள்ளனர்,

(ஐ-ரி)

## பேர்லினில் இருந்து ஜேர்மன் அதிபர் கடமை

பேர்லின், ஒக. 27

இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு முதல் தடவையாக ஜேர்மன் அதிபர் ஜெர்ஹார்ட் ஸ்குருடர் கடந்த திங்கள் முதல் ஜேர்மனியின் பாரம்பரிய தலைநகர் பேர்லினில் இருந்து தன் கடமைகளை ஆற்றத் தொடங்கியுள்ளார்.

பொன் நகரில் இருந்து கடந்த 50 வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட ஆட்சிக் கடமைகள் மாற்றப்படுவது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என அதிபர் குறிப்பிட்டார்.

(ஐ-ரி)

# ஷெரீப்புக்கு எதிராகப் பெண்கள் ஆர்ப்பாட்டம்

இஸ்லாமாபாத், ஒக. 27

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக எதிர்க்கட்சியான ஜமாதீஸ் இஸ்லாமியக் கட்சியின் பெண் உறுப்பினர்கள் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

கார்கில் பகுதியில் இருந்து பாகிஸ்தானிய இராணுவம் மற்றும் கிளர்ச்சிக்காரர்களைத் திரும்ப அழைத்துக் கொண்டதன் மூலம் பிரதமர் ஷெரீப் பாகிஸ்தானுக்குத் துரோகம் இழைத்துவிட்டார் என்றும் —

இதனால் அவர் பிரதமர் பதவியில் இருக்கத் தகுதி அற்றவர் என்றும் —

பதவியில் இருந்து ஷெரீப் விலகவேண்டும் என்றும் இவர்கள் கோரி உள்ளனர்.

நாடாளுமன்றத்துக்கு முன் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் ஷெரீப்பின் மாதிரி உருவத்தை அமைத்து அதன் மீது வளையல்களை எறிந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பாகிஸ்தானின் கலாசாரப்படி பெண்கள் ஒருவர் மீது எறிந்தால் அவர் மிகவும் அவமரியாதைக்குரியவர் என்பது அர்த்தமாகும்.

(இ)

# டாகெஸ்தானில் முக்கிய நகரை ரஷ்யப் படைகள் கைப்பற்றின!

மொஸ்கோ, ஒக. 27

டாகெஸ்தானின் முக்கிய நகரமான டாண்டு ரஷ்யப் படைகளின் பூரண கட்டுப்பாட்டிலுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. டாகெஸ்தானில் ரஷ்யப் படையினருடன் இரண்டு நாள்கள் ஏற்பட்ட தீவிர மோதல்களைத் தொடர்ந்துமேற்படி நகரைக் கைப்பற்றியுள்ளதாக ரஷ்யப் படையினர் கூறுகின்றனர்.

இதற்கிடையில் —

டாகெஸ்தானில் இடம்பெற்றுவரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வரும் முகமாக டாண்டுப் பகுதியில் இருந்து தாம் வாபஸ் பெற்றுள்ளதாக முஸ்லிம் கெரில்லாக்கள் அறிவித்துள்ளனர், இருப்பினும் டாண்டு மலைப் பகுதியில் தற்போது அமைதி நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

முன்னதாக டாண்டுமலைப் பகுதியில் 100 இஸ்லாமிய கிளர்ச்சியாளர்களை ரஷ்யப்படையினர் சுற்றி வளைத்திருப்பதாக இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். ஆனால் அதனை ரஷ்ய அரசு மறுத்திருந்தது.

அதேவேளை டாண்டு மலைப்பகுதியில் இருந்து இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் வாபஸ் பெற்றுச் செல்வது ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடினின் வெற்றியைக் குறிக்கின்றது எனவும் அறிவிக்கப்படுகின்றது.

(ஐ-ரி)

## மன அழுத்தத்தைக் குறைக்கும் இசை

நியூயோர்க், ஒக. 27

இசையைக கேட்பது மன அழுததததைக் குறைக்கின்றது எனறு ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

''இசையைக் கேட்பது மன அழுத்தத்தைக் குறைக்கின்றது என்று இன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது'' என்று ரொப்பர் ஸ்டார்ச் அமைப்பின் பணிபபாளர் டொம் மில்லர் கூறினார்.

### உலக அரங்கில்

30 நாடுகளைச் சேர்ந்த 2 ஆயிரம் பேரை வைத்து நடத்தப்பட்ட ஆய்வில் 56சதவீதமானோர் இசை மன அழுத்தத்தைக் குறைப்பதாகக் கூறினர்.

மன அழுத்தத்தைக் குறைக்கும் இரண்டாவது இடத்தை தொலைக்காட்சி பிடித்துள்ளது. 53 சத வீதமானோர் இதற்கு ஆதரவாக கூறியுள்ளனர். குளித்தல் மன அழுத்தத்தைக் குறைக்கிறதாக 49 சதவீதம் பேர் கூறினர்

காதலித்தல் மன அழுத்தத்தைக்குறைப்பதாக 13சதவீத ஆண்களும்9சதவீதபெண்களும் கூறியுள்ளனர். யோகாசனம் மன அழுத்தத்தைக் குறைப்பதாக 8 சதவீதமானோர் மாத்திரம் தெரிவித்துள்ளனர்.

(ஐ-ரி)

# இந்திய தீவிரவாதத்தலைவரை வெளியேற பிரிட்டன் பணிப்பு

## தனது அமைப்புக்கு நிதி சேகரித்தாராம்

லண்டன், ஒக. 27

இந்தியாவின் ஜம்மு — காஷ்மீர் மாநிலத்தில் இயங்கி வரும் தீவிரவாதக் குழு ஒன்றின் தலைவரான றஹிகுவார் ரகுமான் என்பவரை பிரிட்டனை விட்டு வெளியேறுமாறு பிரிட்டிஷ் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

ஜம்மு — காஷ்மீரில் இயங்கும் தீவிரவாதக் குழுவுக்காக நிதி திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவித்தே அவரை வெளியேறுமாறு பிரிட்டன் உத்தரவிட்டுள்ளது.

இதுவரை காலமும் பிரிட்டனில் இருந்தபடியே றஹிகுவார் ரகுமான் தனது அமைப்பை வழிநடத்தி வந்தார்

ஜம்மு — காஷ்மீரில் இந்தியப் படைகளுக்கு எதிராக போராடுவதற்காக பிரிட்டனில் உள்ள முஸ்லிம்களுக்கு இவர் பயிற்சி அளித்து வந்ததாக இந்தியா குற்றஞ்சாட்டி இருந்தது.

ரகுமானை நாட்டை விட்டு வெளியேறுமாறு பிரிட்டன் உத்தரவிட்டிருப்பது பிரிட்டிஷ் அரசு தனது கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி இருப்பதைக் குறிப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை காலமும் பிரிட்டிஷ் சட்ட திட்டங்களை மீறாமல் பிரிட்டனில் இருந்து செயற்படும் நபர்கள் மீது நடவடிக்கைகள் எதுவும் எடுப்பதில்லை என்ற கொள்கையை பிரிட்டன் பின்பற்றி வந்தது.

கார்கில் யுத்தத்தை அடுத்து இந்தியாவுக்கு ஏற்பட்ட ராஜதந்திர ரீதியான வெற்றியாக பிரிட்டனின் இந்த நடவடிக்கை கருதப்படுவதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

(ஐ-6)

# தேர்தலைக்குழப்ப இடமளியாதீர்

## பாகிஸ்தானிடம் கோரிக்கை

புதுடில்லி, ஒக. 27

இந்தியத் தேர்தல் நடைபெறும் காலத்தில் ஊடுருவல்காரர்களும், பாகிஸ்தான் உளவுப்படையான ஐ எஸ். ஐயின் உளவாளிகளும் குழப்பங்களை விளைவிப்பதைத் தடுக்குமாறு பாகிஸ்தானை இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கேட்டுள்ளார்.

மத்தியப் பிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவுடன் சண்டை இடுவதால் எந்தவித பயனும் இல்லை. இந்தியா தனது அண்டை நாடுகளுடன் நட்புறவையே விரும்புகின்றது.

எனினும் தற்போதைய சூழ்நிலையில் பாகிஸ்தானுடன் அது சாத்தியமில்லை.

எமது அரசு கவிழ்க்கப்பட்டு ஸ்திரமற்ற ஒரு நிலை உருவாகியதால் தான் பாகிஸ்தான் கார்கிலில் அவ்வாறான ஒரு முரட்டுத் துணிச்சலில் இறங்கியது.

அடிக்கடி தேர்தல் நடப்பது நாட்டுக்கு நல்லதல்ல. இந்தத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியே பெரும்பான்மை பெற்று நிலையான அரசை அமைக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சின்னப்பு கணேசன் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (462441096V) நல்லூருக்கும் அரியாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். பஸ் நிலையத்தில் ஒப்படைத்து உதவவும்.
(68501)

திருமதி நந்தகுமார் சுமதி என்பவரது தேசிய, விசேட அடையாள அட்டைகள் 0903007982) தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் 24-8-99 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இராமநாதன், கலட்டி, கோப்பாய் தெற்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
[68499]

சுன்னாகம் தெற்குறொட்டியால்டி சபாபதிப்பிள்ளை மனந்தோப்பு நிலையத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் ஜீவாகரன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை ((090711229) 17-08-99 அன்று இணுவிலுக்கும் மருதனார் மடத்துக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கஜன் ரோடர்ஸ் மருதனார் மடம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்,
(68500)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகல கமரா வகைகளும் எலெக்ரோனிக் பிளாஸ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல் புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல் மாடி) கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில்.
(68424)

### ஆங்கிலம்/ சிங்களம்

ஆண்டு 5 – O/L – A/L பட்டதாரி வரை இலக்கணத்துடன் கூடிய ஆங்கில, சிங்கள வகுப்புகள் அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். ஷண் மாஸ்ரர் இல. 23 டச்சு வீதி. சாவகச்சேரி. (சி/8649)

### தேவை

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற, மனைவியை இழந்த, 60 வயதான ஒருவருக்கு சமையல் வேலை செய்வதற்கு 45 வயதிற்கும் 55 வயதிற்கும் இடைப்பட்ட நல் ஒழுக்கம், நற்குணம், கடமை உணர்வு கொண்ட தேகாரோக்கியம் உள்ள பொறுப்புக்கள் அற்ற ஒரு பெண் தேவை. குழந்தைகள் அற்ற விதவைகள் அல்லது கல்யாணம் ஆகாதவர்களும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி தரப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம். விளம்பர இல. 933, மே/பா உதயன் யாழ்ப்பாணம்.
(68502)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் ஒலிம்பியா, பசிட், கல்டா, ரெமிங்டன் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: R மருதம், இல. 66, மணிக்கூட்டு வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். (68384)

### விண்ணப்பப் படிவம்

2001 ஆண்டு லொத்தர் மூலம் அமெரிக்க வதிவிட விசா படிவம் விற்பனையாகின்றது. நாயகபாலன் மானிப்பாய். (68474)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள குளிர்சாதனப் பெட்டிகள் [Kelvenator (Double Door), Intersit, Hitachi, Sisil - 60] மற்றும் இசைக் கருவிகள் Organ Pss – 26, CA – 110, CT - 310, கிற்றார்கள், வயலின், மிருதங்கம் என்பனவும் விற்பனைக்குண்டு தொடர்பு; P. தேவகுமார் (தேவு) மூளாய் றோட், வட்டுக்கோட்டை.
(68484)

### வீடு வாடகைக்கு

No. 2, Fountain House Lane, Deans Rd, Colombo. (கண் ஆஸ்பத்திரிக்கு அருகில்) தொலைபேசி வசதிகளுடன் கூடிய வீடொன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு: (மாலை நேரங்களில்) பொ. சிறீநடராஜ் ''நிறைகனி'' மதவடி லேன், திருநெல்வேலி. (68507)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: K அழகரட்ணம், நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோயில் வடக்கு வீதி T P No. 070-212354, 070-212383.
(68430)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் 2/2, மருதடி வீதியில் ஒரு பரப்புக் காணியில் சகல வசதிகளையும் கொண்ட நான்கு அறைகளை உடைய கல்வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு இ லூர்த்துமேரி, இல. 40/05, கோவில் வீதி. யாழ்ப்பாணம்.
(68381)

## டிரக் விபத்தில் 6 படையினர் காயம்

**வவுனியா, ஒக 27**

வவுனியாவுக்கு கிழக்கே மகா மயிலங்குளம் என்னும் இடத்தில் கடந்த செவ்வாய் மாலை 6 மணியளவில் படையினரின் டிரக் ஒன்று விபத்துக்குள்ளானதில் 6 படையினர் காயமடைந்தனர்.
(இ-3-164)


பத்தமேனி

## இளங்கதிர் பாலர் முன்பள்ளி சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

பத்தமேனி பாரதி வீதி, இளங்கதிர் பாலர் முன்பள்ளி அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் இன்று 27–08–99 வெள்ளிக்கிழமை நடைபெறமாட்டாது.

டி சீட்டிழுப்பு 19-10-99 இல் நடைபெறும்.

— நிர்வாகிகள்

இளங்கதிர் பாலர் முன்பள்ளி,
பத்தமேனி,
அச்சுவேலி.

[68509]



## கண்ணீர் அஞ்சலி

வலி.கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ, சங்க
கிளை முகாமையாளர்

### சோமசுந்தரம் நடேசலிங்கம்

அவர்கள் 26 – 08 – 99 அன்று இறைபதமெய்திய செய்திகேட்டு அதிர்ச்சிஅடையும்அதே வேளை அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் பாரியார், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்,**
**பணியாளர்கள், கிளைக்குழுவினர்கள்.**

வலி, கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம்.
நீர்வேலி.

(சி/8660)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ் மாவட்ட சமாதான நீதிவானாக
யாழ் மாவட்ட நீதிமன்றில் பதவிப்பிரமாணம் எடுத்துள்ள
ஓய்வு பெற்ற அரச அலுவலரும்
எமது பொதுஸ்தாபனங்களின் நிறுவுனரும்,
காப்பாளருமாகிய

### திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை

அவர்களை

எமது பொதுஸ்தாபனங்கள் மனமார வாழ்த்தி மகிழ்கின்றன. அவர் நீடூழி வாழ்ந்து, அவரது சேவைகள் மேன்மையுற

எமது உளம் கனிந்த ஆசிகள்!

ஆவரங்கால் இந்து இளைஞர் மன்றமும்
விவேகானந்தா சனசமூக நிலையமும்.

ஆவரங்கால்,
புத்தூர்.

(68505)



யாழ். மாவட்ட

## ஷெல் காஸ் சமையல் வாயு [SHELL GAS]

விநியோக உரிமைபெற்ற

## ''மெக்ஸ்'' நிறுவனத்தினரின்

## பணிவான அறிவித்தல்

போக்குவரத்து, கப்பல் கட்டண உயர்வினால் எம்மால் இதுவரை காலமும் 430 ரூபாவிற்கு விற்பனை செய்துவந்த (SHELL GAS) சமையல் வாயு எதிர்வரும் 01-09-1999 முதல் 530 ரூபாவாக விற்பனை செய்யப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். சிரமத்தைப் பாராது எங்கள் அன்பான வாடிக்கையாளர்களை அன்புடன் எம்முடன் ஒத்துழைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல்லத்தரசிகளுக்கு இனிப்பான செய்தி! இதமாகவும், சுகமாகவும் நேரத்தை வீணாக்காமல் இலகுமுறையில் சமையல் செய்யக்கூடிய சமையல் வாயு சிலிண்டர், பலவித தெரிவுகளைக் கொண்ட அடுப்புகள் மற்றும் உபகரணங்கள் யாவும் பெற்றுக்கொள்ள

யாழ். நகரில் ஒரே ஒரு ஸ்தாபனம்

## மெக்ஸ் நிறுவனம்

தலைமையகம்
''மெக்ஸ்''
இல. 70, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 2032 2852

கிளை நிறுவனம்
''மெக்ஸ் புடைவை மாளிகை''
(மொத்த, சில்லறை புடைவை வியாபாரிகள்)
இல. 34, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(68465)



## இலவச கண்பார்வை/ பொது மருத்துவ பரிசோதனை முகாம்

காலம்: 29 – 08 - 99 (ஞாயிறு)
காலை 9 மணிமுதல்

இடம்: சோதிவேம்படி வித்தியாசாலை,
மானிப்பாய்.

கண்பார்வை பரிசோதனை மேற்கொள்பவர்கள்:
யாழ், பிரபல

### S. M. பெர்னாண்டோ

ஸ்தாபனத்தினர்

இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும்
பொது மருத்துவ பரிசோதனைகளை

மேற்கொள்ளும் மருத்துவக்குழு:

Dr. K. இரத்தினசிங்கம் — Dr. C. அருமைத்துரை
Dr. S. பரமானந்தன் — Dr. K. ஜீவானந்தன்
Dr. N. தருமலிங்கம் — திரு, S. யோகேஸ்வரன் M.L.T.

சேவைகளைப் பெறவிரும்புவோர் மானிப்பாய் சந்தைக்கு அண்மையிலுள்ள ஜீவன் தொலைத் தொடர்பு சேவை நிலையத்தில் பெயர்களைப் பதிவு செய்யலாம்.

குறிப்பு: வசதி குறைந்தவர்களுக்கு மட்டும் தேவைப்படும் மூக்குக்கண்ணாடிகள் பிறிதொரு தினத்தில் வழங்கப்படும்.

லயன் எஸ். எஸ். தங்கராஜா
செயற்றிட்டத் தலைவர்

லயன் Dr. P. உரோமகேஸ்வரன்
தலைவர்

லயன்ஸ் கழகம்,
மானிப்பாய் வட்டம்.

(சி/8658)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஜனக் கல்லூரி விடயம்:

# தெல்லிப்பழைச் சந்தியூடாக மாணவர் செல்ல அனுமதி

வலி. வடக்கு. ஓக. 27

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் காங்கேசன்துறை வீதி, வழியாக தெல்லிப்பழைச் சந்திக்குச் சென்று பாடசாலைக்குச் செல்லலாம்.

வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் பலாலி இராணுவத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக வலி. வடக்குப் பிரதேசசபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் அறிக்கை ஒன்றை பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மருதனார் மடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை மீண்டும் மழை காலத்துக்கு முன்னர் பழைய இடத்தில் இயங்க நடவடிக்கை யெடுக்கும்படி பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் கேட்டுக்கொண்டனர்.

தற்போது இப்பாடசாலை வளவில் உள்ள பற்றைகள் மரங்கள் யாவும் துப்புரவு செய்யும் பணி எமது சபை ஊழியர்களினால் சனி, ஞாயிறு விடுமுறை பாராது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணி இம்மாத முடிவுக்குள் முடிவடைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊழியர்களுடன்வேலையை ஊக்குவிப்பதற்காகச் சென்று நேரில் தற்போதைய கட்டடங்களின் உண்மை நிலையைப் பார்வையிட்டேன்.

9 வகுப்பறைகள் கூரையில்லாது இருக்கின்றதுடன் துரையப்பா மண்டபம், ஜெயரத்தினம் மண்டபம் ஆகியவற்றின் மேல்மாடி கூரையில்லாத போதும் உடனடியாக 3 வகுப்புகளை நடத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

இதுபற்றி 515 ஆவது படைப்பிரிவின் தளபதியுடன் தொடர்பு கொண்டு கதைத்த பொழுது பாடசாலை மீண்டும் பழைய இடத்தில் இயங்குவதற்கு எந்த வகையான தடையும் இல்லை என்றும் கல்லூரிக்குச் செல்வோர் தெல்லிப்பழைச் சந்தியூடாக மேற்கு நோக்கிச் செல்லலாம் என்றும், கல்லூரிக்கு மேற்குப் புறம் இருப்பவர்கள் விளான்- தெல்லிப்பழை வீதியில் அமைந்த தடைமுகாமுக்கு ஊடாகக்கல்லூரிக்குச் செல்லலாம் என்றும் தெரிவித்தார்.

எனவே மகாஜனக் கல்லூரியை மீண்டும் பழைய இடத்தில் இயங்கச் செய்வதற்கு ஆர்வமுள்ள அனைவரும் கல்லூரி நிர்வாகத்துடனும். கல்வித்திணைக்களத்துடனும் தொடர்பு கொண்டு ஏற்ற ஒழுங்குகளைச் செய்வார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

புனரமைப்புப் பணிகளுக்கு குடாநாட்டில் இயங்கும் தொண்டர் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு எம்மால் இயன்றதைச் செய்யத் தயங்கமாட்டோம் என உறுதி கூறுகின்றேன். அதனைத் தொடர்ந்து படிப்படியாக மக்களை மீளக் குடியமர்த்தும் எமது பணி தொடரும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

## சுயதொழில் முயற்சிக்கு கூட்டுறவுச் சங்கம் கடன்

அரியாலை, ஓக. 27

அளவெட்டி — மல்லாகம் நலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு அங்கத்தவர்களுக்கு கடன் அடிப்படையில் நிதி வழங்கியுள்ளது.

முதற்கட்டமாக 30 ஆயிரம் ரூபா வீதம் நான்கு பேருக்கு இந்நிதி வழங்கப்பட்டிருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே போன்று மேலும் ஐந்து பேருக்கு கடன் அடிப்படையில் இந்நிதியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் பொருட்டு இந்நிதித் திட்டத்தை சங்கம் அமுல்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-17)

## காக்கைதீவுப் பகுதிக்கு நீர் விநியோகத் திட்டம்

வலி.தென்மேற்கு, ஓக. 27

அகதிகளுக்கான ஐ நா. தாதரக உதவித் திட்டத்தின் கீழ் காக்கைதீவுப் பகுதிக்கு 5 லட்சம் ரூபா செலவில் குழாய் நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் ஆனைக்கோட்டை [ஜே-133] கிராம அலுவலர் கா. சந்திரராசாவின் மேற்பார்வையில் கடந்த வாரம் முதல் ஆரம்பமாகி உள்ளன.

மேற்படி திட்டத்தின் கீழ் பழம்றோட்,பழைய பொலீஸ் ஸ்ரேசன் வீதி,3 ஆம்கட்டை, காக்கைதீவு ஆகிய பகுதிகளில் குழாய் நீர் வழங்கப்படவுள்ளது.

ஆரம்ப விழாவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த உதவி த்திட்டமிடல் பணிப்பாளர் வி. கனகரத்தினம், கிராம அபிவிருத்தி அதிகாரி க. சிறிபதி,தொழில்நுட்ப உத்தியோகத்தர் என். கருணாகரன் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி வேலைகள் யாவும் பொதுமக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன.

[ஐ-185]

## இலவச மருத்துவ பரிசோதனை

தென்மராட்சி, ஓக. 27

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கோயில் குடியிருப்பு, சாவகச்சேரி தெற்கு, சங்கத்தானை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதி புனித விகோரியார் தேவாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

சிகிச்சை முகாமில் கண், நீரிழிவு, இரத்த அமுக்கம், தொழு நோய், வாய்ப்புற்று ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளதால் கலந்து கொள்ளவுள்ள மக்கள் தத்தமது பகுதி கிராம அலுவலர்கள் அல்லது சாவகச்சேரி நவீன சந்தையில் உள்ள விமலாஸ் விற்பனை நிலையத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு கழக கண் பார்வைப் பிரிவுத் தலைவர் லயன் எஸ். கே. நவரத்தினம் தெரிவித்தார். (ஐ-117)

# தேநீர்க் கடைகளில் மதுபான விற்பனை

## இருவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஓக. 27

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் தேநீர் வியாபாரம் எனப் பதிவுச் சான்றிதழ் பெற்ற இரு கடைகளில் சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்தமைக்காக அந்தக் கடைகளின் வியாபாரப் பதிவினை இரத்துச் செய்ய பிரதேச செயலர் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறார்.

அனுமதியின்றி மதுபானம் விற்றமைக்காக சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள தேநீர்க் கடை உரிமையாளரான கிருஷ்ணன் சந்திரகிருஷ்ணன் என்பவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் —

மற்றொரு கடை உரிமையாளரான முத்துக்குமாரு சபாரத்தினம் என்பவருக்கு 2 ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் அபராதம் விதிக்கப்பட்டதையடுத்து பிரதேச செயலர் இவ்விரு கடைகளின் வியாபாரப் பதிவினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

(ஐ-117)

## ஒன்றுகூடல்

வலி. தென்மேற்கு, ஓக. 27

சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 'ஐஸ்' உற்பத்தியில் ஈடுபடும் அனைத்து தயாரிப்பாளர்களையும் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஒன்றுகூடுமாறு சுகாதார பரிசோதகர் எஸ். ரவீந்திரன் கேட்டுள்ளார்.

(ஐ-185)

# காக்கைதீவுப் பகுதியில் மண் அகழ்வதற்குத்தடை

## மீறுவோர் மீது கடும் நடவடிக்கை

வலி.தென்மேற்கு, ஓக. 27

காக்கைதீவுப் பகுதியில் சட்டவிரோதமாக மண் அள்ளுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

தான்தோன்றித் தனமாக வியாபார நோக்குடன் மண் அள்ளுவதினால் கடல்நீர் உட்புகுந்து வருகிறதாகவும்—

இதனால் விவசாயிகள் முதல் குடிமக்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை—

சட்டத்தை மீறி மண் அள்ளுவோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஆனைக்கோட்டை [ஜே 133] கிராம அலுவலர் பணிக்கப்பட்டுள்ளார். (ஐ-185)


## விற்பனைக்கு

ஐஸ்கிறீம்கோண், ரொபி வகைகள், ஐஸ்பழதயாரிப்புக்குரிய குச்சி வகைகள், வெங்காயம் பொதி செய்யும் நெற்பேக்குகள், ஸ்ரிக்கர் படங்கள், தவிடு, தேங்காய்ப்பிண்ணாக்கு, தரமான தேயிலை வகைகள், சோழன், கச்சான், தொலைபேசிவகைகள், கால்மிதிகள் என்பனவற்றை மொத்தமாக மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நாதன் களஞ்சியம்,
213C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
T. P. 2916 (68450)

மானிப்பாய் கோவில்பற்று

## ப. நோ. கூ. சங்கம்

## கோழித்தீன் விற்பனை

சங்கத்தில் கோழிகளுக்கான முட்டைத்தீன் (Layer Mash) விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

பைக்கற் ஒன்றின் விற்கும் விலை ரூபா 850.

தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்.

(சி/ 8634)

உ
விராட் விஸ்வப்பிரம்மணே நம

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான பிரமாதி வருஷம் ஆவணித் திங்கள் 12 ஆம் நாள் (29 - 08 - 99) ஞாயிற்றுக்கிழமை பகல் 11 04 — 12.00 மணி வரையில் வரும் அமிர்தயோக சுபமுகூர்த்த நல்வேளையில்,

எமது புத்திரி

**செல்வி கோபிகா** அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா நடத்த இறையருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால்.

அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்
இ. ஆனந்தராசா தம்பதிகள் குடும்பத்தினரும்
மைக்றோ ஓட்டோ வேக்ஸ், யாழ்ப்பாணம்

''தனுகோபி மகால்''
78, பத்திரகாளி கோயிலடி,
வண்.மேற்கு, யாழ்ப்பாணம்.
(68446)

குருபதம்

## மணையியல் கண்காட்சி

இடம்:- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

காலம்:- 28-08-99 சனிக்கிழமை காலை 10மணி முதல் ஞாயிறு மாலை 4.30 மணி வரை

பிரதம விருந்தினர்:
திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல்
(தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர்)

புதிய வகுப்பு ஆரம்பம்: 12 - 09 - 99 ஞாயிறு காலை 8.30 மணி

தையல் — பூவேலை — சமையல் பாகம் — மணமகள் அலங்காரம் — துணியில் வர்ணம் தீட்டல் — மாச்சீனி மலர் அலங்காரம் — கம்பளி நூல் வேலை — கோலம் — கைப்பணி

அருளாணைப்படி மேலாளர்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.
நல்லூர்.
(68503)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

பன்னாலை தெல்லிப்பழை திருவருள் மிகு

## வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மகோற்சவகால அபிஷேக விஞ்ஞாபனம்

## பிரமாதி வருடம் — 1999

**ஆரம்பம்: 29 – 08 – 99 ஞாயிற்றுக்கிழமை**
**நிறைவு: 09 – 09 – 99 வியாழக்கிழமை**

மேற்படி நாள்களில் தினமும் காலை 10.30 மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூஜை நடைபெற்று நண்பகல் 12.30 மணியளவில் நிறைவு பெறும்.

அடியார்கள் அனைவரும் வருக!
ஐங்கரன் அருள் பெறுக!
சுபம்

இ. சபாரத்தினக்குருக்கள்,
ம. மகேந்திரசர்மா,
ஆதீனகர்த்தாக்கள்.

வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம்,
தெல்லிப்பழை. (68498

## ஸ்ரீவல்லிபுரா போட்டோ

SVF

★ எதிர்வரும் 31-08-99 கொழும்பிற்கு படச்சுருள்கள் அனுப்பி வைக்கப்படும். எனவே 30-08-99 இற்கு முன்னர் தங்கள் படச்சுருள்களை எம்மிடம் ஒப்படைக்கவும்.

★ எம்மிடம் மகாபாரதம், ஸ்ரீகிருஸ்ணா, இராமாயண தொடர்கள் (Vedio கசற்) வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

புலோலி தெற்கு,
புலோலி.

545, பருத்தித்துறை வீதி.
நல்லூர்.

(68454)

வேலணை – பெருங்குளம்

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பூங்காவனத் திருவிழா விஞ்ஞாபனம்

**இன்று (27 – 08 – 99) வெள்ளிக்கிழமை**

பகல் 10 மணிக்கு சங்காபிஷேகமும் இரவு அபிஷேக ஆராதனையும் இடம்பெற்று அழகிய பூந்தண்டிகையில் அம்பாள் வீதி உலாவரும் காட்சி நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து
வேலணை கிழக்கு வி. என். தங்கவேல் அவர்களின் நெறியாள்கையில்
சண்டிலிப்பாய் 'இளைய நிலா' நாடகமன்றம் பெருமையுடன் வழங்கும்
K. புஸ்பநேசனின்

**காத்தவராயன்**
(சிந்து நடைக்கூத்து)
நாடகம் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பூங்காவனத் திருவிழா உபயகாரர்
(68440)

## ராஜா கல்வி நிலையம்

நந்தாவில், கொக்குவில்.

**G.C.E (O/L) பயிற்சிப் பரீட்சை**

நாள்: 28 – 08 - 99 சனிக்கிழமை முதல் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும்

இடம்: ராஜா கல்வி நிலையம்

பாடங்கள்: கணிதம், விஞ்ஞானம், வர்த்தகமும் கணக்கியலும், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சைவசமயம்,

கட்டணம்: ஐந்து ரூபா மட்டுமே (5/-)

★ எவரும் பரீட்சையில் பங்குபற்றலாம். வினாத்தாள்கள் தேவையானாலும் பெற்றுக்கொள்ளலாம்.
★ கல்வி நிலையங்களிற்கு விசேட சலுகை வழங்கப்படும்.

தொகுப்பு:
ஆசிரியர் செ. தவராசா

★ 28 - 08 - 99 இல் கணிதம் (பகுதி I) பரீட்சை நடைபெறும்.

## மலகூடம் அமைக்க மானியம்

தென்மராட்சி, ஓக. 27

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மலகூடம் அமைப்பதற்கு மானியத்திற்காக கடந்த 1998 நவம்பர் மாதம் வரை விண்ணப்பித்த 50 பேருக்கு கொடுப்பனவுக்குரிய காசோலைகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வந்துள்ளன.

மானிய உதவி கோரி விண்ணப்பித்தவர்கள் உடனடியாக வந்து அவற்றைப்பெற்றுக் கொள்ளுமாறு பணிமனைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஆயிரத்து 500 ரூபாவுக்கு உட்பட்ட வருமானமுள்ள குடும்பங்களுக்கு மலகூடம் அமைப்பதற்கு சுகாதாரத் திணைக்களத்தினால் மானியமாக 3 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஐ–117)

## கர்ப்பிணிகளுக்கு போஷாக்கு உணவு

நெடுந்தீவு, ஓக. 27

நெடுந்தீவுப் பிரதேச சபை கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்கு உணவுப்பொருள்களை கடந்த திங்கட்கிழமை வழங்கியது.

பிரதேச சபைத் தலைவர் அ. வெ. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நெடுந்தீவு வைத்திய அதிகாரி வி. சிவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மேலும் மூன்று கட்டங்களாக போஷாக்குணவு வழங்கப்படும் என பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார். [ஐ–111]

## சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம் ஓக. 27

யாழ். போதனா வைத்திய சாலை வளவினுள் கடந்த செவ்வாய்க் கிழமை பகல் பூட்டிய நிலையில் விடப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று திருட்டுப்போயுள்ளது

ஆஸ்பத்திரி நிர்வாகப்பிரிவு அலுவலகத்தில் கடமை புரியும் ஒருவருடைய சைக்கிளே திருடப்பட்டது. (ஐ)

## புதிய தொழில்நுட்பத்துடன் இணைந்த நுண்ணிய கொங்கிறீற் கூரைத் தகடுகள்

கட்டடக் கலைஞர்களே, இல்லத்தரசிகளே!

கலைவடிவங்களை உள்ளடக்கிய நிர்மாண வேலை செய்வதற்கும் இல்லங்களை இளமை குலையாமல் நீண்ட காலத் தோற்றமளிப்பதற்கும் குறைந்த செலவில் நிறைந்த உறுதியுடன் தட்ப, வெப்ப நிலைக்கேற்ப அனுபவமிக்க பிரிட்டிஷ் நாட்டின் நிபுணர்களால் வடிவமைக்கப்பட்ட கூரைத் தகடுகள், எதிரொலியைத் தடுக்கும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்ட கொங்கிறீற் கற்கள் போன்றவற்றை மலிவாகவும் தாராளமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| கூரைத் தகடுகள் | – 2' / 2' |
| கொங்கிறீற் கற்கள் 1 | – நீளம் 12'' |
| கொங்கிறீற் கற்கள் 2 | – நீளம் 16'' |

இடம்:

**மனிதமுன்னேற்ற நடுநிலையம்**
இல. 14, மத்தியூஸ் வீதி,
தியோகு பாதை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் 021 - 2571
(68491)

## வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்
**29 – 08 – 99 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 10மணிக்கு கல்லூரி மண்டபத்தில்**

சங்கத் தலைவர்
திரு. சு. சே. குலநாயகம்

தலைமையில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரையும் கூட்டத்திற்கு தவறாது சமுகம் தருமாறும் இதுவரை உறுப்பினராகச் சேராதவர்கள் சந்தா செலுத்தி உறுப்பினராகச் சேருமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பூ. அகமணித்தேவர்.
செயலாளர்

யா / சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை,

விளம்பர அன்பளிப்பு:

**கணபதி தொலைத் தொடர்புநிலையம்,**
பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை.

தொலைபேசி இல. 070 –212436
வெளிநாடு: 0094–70–212436

(68504)

உ
அம்பிகை துணை

## விவாஹ சோபன அழைப்பு

அன்புடையீர்,

ஸ்ரீபகவத் கிருபையாலும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள், சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் அருளாலும் காஞ்சி காமகோடி பீட சுவாமிகளின் அருளாசியுடனும் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் பிரமாதி வருஷம் ஆவணித்திங்கள் 12 ஆம் நாள் (29-08-1999) ஞாயிற்றுக் கிழமை காலை (பழைய நேரம்) மணி 9. 15 முதல் 11. 07 வரையுள்ள துலா லக்கினமும் திருதியை திதியும் உத்தரட்டாதி நக்ஷத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுப முகூர்த்தத்தில்,

நயினை பிரம்மஸ்ரீ ஐம்புகேஸ்வரக் குருக்கள் தம்பதியினரதும்
சுதுமலை பிரம்மஸ்ரீ பொன்னுச்சாமிக் குருக்கள் தியாகராஜ ஐயர் தம்பதியினரதும் பௌத்திரனும்
எமது சிரேஷ்ட புத்திரனுமாகிய
சிரஞ்சீவி
**நதிசுத சர்மா** [B.Sc.]
அவர்களுக்கு

வட்டுக்கோட்டை ஐயாத்துரைக் குருக்கள் தம்பதியினரின் பௌத்திரியும்
எமது கனிஷ்ட புத்திரியுமாகிய
சௌபாக்கியவதி
**ஜெயந்தகலா** [B.Com.]
அவர்களை

கன்னிகாதான, பாணிக்கிரகண, மாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு கந்தர்மடம் பழம் றோட், ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் பந்து மித்ரஸகிதம் வருகை தந்து வைபவத்தைச் சிறப்பித்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சமாவர்த்தனம்:** காலை மணி 6. 05 முதல் 7. 24 வரை மணமகனில்லத்தில்.

**வதூவரகிரகப் பிரவேசம்:** (வரவேற்பு உபசாரம்)
மாலை 3. 00 மணி மணமகனில்லத்தில்.

தங்கள் நல்வரவை நாடும்

சிவஸ்ரீ ஐம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்கள் தம்பதி
அம்மன் கோயிலடி, சுதுமலை.

சிவஸ்ரீ ஐ. சிதம்பரநாத சர்மா
ஞானசம்பந்தர் வீதி, வட்டுக்கோட்டை.

சுபம்
(68375)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## மறுபரிசீலனை செய்யுமா?

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு — அரசாங்கத்தின் தீர்வு யோசனையை நிறைவேற்றுவதற்கு—விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கோரியுள்ளார். கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற அரசாங்கத்தின் ஐந்தாவது ஆண்டுப் பூர்த்தி விழாவில் — தேசிய விழாவில் — பேசுகையிலேயே இந்த பகிரங்கக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

ஜனாதிபதியின் பிரஸ்தாப கோரிக்கை செயல் வடிவம்பெற வேண்டுமாயின் அல்லது அதற்கான விருப்பம் விடுதலைப் புலிகளுக்கு உண்டா என்று அறிவதாயின் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றால் தான் சாத்தியமாகும்.

ஆனால் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தின் கூட்டம் ஒன்றில் பேசுகையில், விடுதலைப் புலிகளுடன் தற்போதைக்குப் பேச்சுவார்த்தைகள் எதுவும் நடைபெற மாட்டாது என்றவாறு தெரிவித்துள்ளார்.

கதிர்காமரின் இந்தக் கருத்து அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாது என்பதனையும் அவர்களாகப் பேச்சுவார்த்தை நடத்த வரும்போதே அது சாத்தியமாகும் என்ற கருத்தையே கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்திய பின்னர் அல்லது தோற்கடித்த பின்னரே அவர்களுடன் பேசமுடியும் என்ற நிலையை அரசுகொண்டிருப்பதாகக் கதிர்காமரின் கூற்றின் மூலம் கொள்ளமுடிகிறது. ''தொடரும் யுத்தத்தினை அடுத்த வருடம் முடிவுக்குக் கொண்டுவருவதே அரசின் நோக்கமாக உள்ளது சமாதானத்தைக் காணப் புலிகள் ஒத்துழைப்பதாக இல்லை'' என்று அவர் கூறியிருப்பது போரைத் தொடர்வதிலேயே அரசாங்கம் ஈடுபாடுகாட்டுகின்றது என்பதை மறைமுகமாகச் சொல்கிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணவேண்டுமானால் விடுதலைப் புலிகளின் பங்களிப்பும் அதில் இருக்க வேண்டும் என்பதனை வெளிநாடுகள் உட்பட பல தரப்புகளும் வற்புறுத்தி வருகின்றன. உள்நாட்டிலும் கூட விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு முன்னர் தென் பகுதியின் பிரதான அரசியல் கட்சிகளான ஆளும் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து அதன் பின்னர் பேசவேண்டும் என்ற கருத்து முன்னரைவிடஇப்போது அதிகம் மேலோங்கியுள்ளது.

ஆனால் அரசாங்கமோ இந்தக் கருத்துக்களை எல்லாம் புறக்கணித்துவிட்டு விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக ஒடுக்குவதிலேயே முனைப்புடன் செயலாற்றி வருகிறது. எனினும் அரசியல் தீர்விலேயே தனக்கு அக்கறையும் ஆர்வமும் உள்ளதாகக் காட்டிக்கொள்ள தீர்வுப் பொதி ஒன்றை முன்வைத்திருக்கிறது.

சந்திரிகா புலிகளை ஒத்துழைப்புத்தருமாறு கேட்டிருப்பதும், போர் அடுத்தவருடத்திலேயே முடியும் என்று கதிர்காமர் கால அட்டவணை வரைந்திருப்பதும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சொல் ஒன்றும் செயல் வேறாகவும் மட்டுமன்றி நேரத்துக்கு நேரம் ஆளுக்கு ஆள் மாறுபடுகிறது என்பதனையும் காட்டுகிறது. இது விடயத்தில் அரசாங்கத்திடம் ஒரே நிலைப்பாடு இல்லை என்றும் ஊகிக்கவேண்டி உள்ளது.

அரசாங்கம் ஒரே விதமாகப் பேசவும் அதே விதமாகச் செயற்படவும் தனது இப்போதைய இரட்டை நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

# ஒழுக்க நியதிகளைபேணுவதன் மூலம் ஆலயத்தின் புனிதத்தைக்!காப்போம்

பல துன்பங்களிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் சைவ மக்களாகிய எங்களுக்கு இறைவழிபாடு முக்கியமானது என்பதனை யாவரும் உணர்வர். என்ன செய்வதென்று அறியாது கலக்கமுற்றிருந்த தேவர் முருகப் பெருமானை வழிபட்டுத் தமது துன்பங்களை மாற்றியுள்ளனர் என்பதனைப் புராணங்கள் கூறுகின்றன. அது போன்று எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கலகத்தை நீக்குவதற்காக முருகப்பெருமானின் திருவருள் மிக அவசியமென்பதனை யாவரும் உணர்ந்துள்ளோம்.

நல்லைக்கந்தனின் மஹோற்சவ காலம் முருகனின் அருள் நோக்கினைப் பெற அரிய சந்தர்ப்பம். இக்காலத்துள் அடியார்கள் பலர் ஒன்றுகூடி வழிபடுவர். நாட்டில் அமைதி நிலவவேண்டும் என்பதே அனைத்து அடியார்களின் பிரார்த்தனையாகும்.

உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் முருகன் ஆலயமும்—அதன் சூழலும் புனிதமாகக் காட்சியளிக்கின்றது. புனிதத்தின் ஊடாகவே நாம் இறைவனின் அருளைப் பெற முடியும். புனிதமும்—பக்தியும் பரந்தோடும் இச்சூழலில் வழிபட வரும் அடியார்கள் சிந்திக்கவேண்டியது அமைதியை உருவாக்குவதேயாகும்.

''நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி—
கிளியே,
இரவு பகல் காணேனடி
பஞ்சம் படை வந்தாலும்—
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி—
கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி''

எனப் பாடிப் பரவி மகிழ்ந்தவர் தவத்திரு சிவயோக சுவாமிகள். இப்பாடலை நாம் சிந்திக்கும்போது நல்லூரான் திருவடியே துணைபுரியும் என எமக்கு உறுதிப்பாடு தோன்றுகின்றது என்பதனை நாமே உணர்கின்றோம்.

### ஞானக் கதிர்

ஆகவே ஆலயத்துக்கு வரும் அடியார்கள் உடல் தூய்மை—உளத்தூய்மை உடையவர்களாய் முருகப்பெருமானின் திரு நாமங்களை உச்சரித்துக் கொண்டு ஆலயம் சென்று பாடிப்பரவி முருகப்பெருமானின் அருளைப் பெறுவோமாக. அலங்காரக் கந்தனாக, அழகொழுகும் திருப்பெரு வடிவமாக முருகப்பெருமான் வீதிவலம் வரும் காட்சியைப் பக்தியோடு கண்டு களிப்பது எமது பாக்கியமே.

எந்த அடியார்களின் மனதுக்கும் வேதனை தரக்கூடிய செயற்பாடுகளில் யாரும் ஈடுபடக்கூடாது. புற விடயங்களில் மனதை விட்டு துன்பத்தைத் தேடிக் கொள்ளக் கூடாது. ''செங்கோடனைக் கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே இந்த நான்முகன்'' என்று அருணகிரியார் கூறியதனைச் சற்றே சிந்திக்க வேண்டும்.

அடியார்களின்வழிபாட்டிற்காக புனிதத்தன்மையோடு அருள் ஒளிவீசும் சூழலை மாசுபடுத்தக்கூடாது. அடியார்களாகிய ஆண்கள், பெண்கள் விசேடமாக இளம் சமுதாயத்தினர் தமது ஒத்துழைப்பை முக்கியமாக ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட வேண்டும். இப்புனித இடத்தைப் பொழுதுபோக்கும், களியாட்ட விழாவாகக் கருதக் கூடாது. சைவசமயத்தின் உயர் நிலையை உணர்ந்து உறுதியாக எமது பங்களிப்பைச் செய்ய வேண்டியது அவசியமாகும். புனிதப் பொலிவைச் சிதைக்கக்கூடிய எந்த ஒரு செயற்பாட்டுக்கும் இடமளிக்கக்கூடாது.

சைவப்புலவர் **வ. கந்தசாமி**

நல்கி ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்துப் பக்தி நிலையை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். எமது ஒழுங்கான வழிபாட்டு முறையைக் கண்டு ஏனைய மதத்தினரும் மதிப்பளிக்க வேண்டும். ஆலய வழிபாட்டில் கலந்து கொள்ள வரும் அடியார்கள் தமது உடை, நடையில்பக்திக் கோலத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

கலக்கம் தீர்ந்து — நல்வாழ்வு நிலை பெறவேண்டி வழிபட வந்தோம் என்ற உயரிய எண்ணத்திற்கு அடியார்கள் இடம் அளிக்க வேண்டும். சைவகலாசாரம் பேணப்பட வேண்டும்.

அன்புக்கு இடமளித்து ஆறுமுகப் பெருமானின் அருளைப் பெற்று நாட்டில் அமைதி நிலவ அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவோமாக.

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக 27

நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசை அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிமுதல் 7.00 மணி வரை பரமேஸ்வரி கணேசனின் இசைக்கச்சேரி இடம்பெறும். இதற்கு அணிசேர் கலைஞர்களாக கே. குகபரன்[வயலின்], எஸ். மகேந்திரன்[மிருதங்கம்] ஆகியோர் கலந்து கொள்வர்.

[ஐ-ரி-30-103]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக.27

நல்லூர்க்கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கான கதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்த சர்மாவினால் நிகழ்த்தப்பட்டு வரும் திருதொண்டர் புராண தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று வெள்ளிக்கிழமை 'திருநீலகண்டர்' எனும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு இடம்பெறும்.

(ஐ-ரி-30-103)

## கும்பாபிஷேகம்

வடமராட்சி, ஓக. 27

அச்சுவேலி தெற்கு நெல்லியோடைப்பதி அருள்மிகு ஞான முத்துமாரி அம்பாள் கோயிலில் அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கும் 11 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-173)

★ ★ ★

வடமராட்சி, ஓக. 27

தென்புலோலி முறாவில் விநாயகர்கோயில் ஜீர்ணோத்தாரண பரிவாரபுனருத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாஷேகம் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது

சிவாகம கிரியா தத்துவநிதி சிவப்பிரம்ம ஸ்ரீ ராம்கெங்காதரக்குருக்கள்பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

[ஐ-173]

## வன்னியால் வந்த குடும்பங்களுக்கு பொருள்கள்

தென்மராட்சி, ஓக. 27

வன்னியிலிருந்து அண்மையில் சொந்த இடங்களுக்குத் திரும்பிய 340 குடும்பங்களுக்கு வழங்கவென பிளாஸ்ரிக் பாய்களையும் சவர்க்காரப் பெட்டிகளையும் 'யுனிசெவ்' நிறுவனத்தினர் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு வழங்கியுள்ளனர்.

இவை அடுத்த வாரமளவில் வன்னியிலிருந்து திரும்பிய குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் தெரிவித்தனர்.

(ஐ-117)

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பிதழ்

## சிந்தை குளிரச் சீர்செய்வாய்!

அழுந்தி உளம்வருந்தி அவலப்பட்டேகையிலே
எழுஞ்சுடர்வேல் ஏந்தலுனை எம்மகத்தே
கொண்டதனால்
எம்மிடர்கள் கரைந்தோட ஏகினோம் உன்னடிக்கே
செம்மனத்தாய் சேவற் கொடியானே
இடர்தீர்க்கநாளும்

அவுணரை அறுத்த தனிநெடு வேலோய்
அவலம் போக்க அருகினில் வருவாய்
தேவர்கள் துயரைத் துடைத்த செவ்வேளே
தெவ்வர்தம் பகையைத் துடைத்திடலெப்போ
எம்மவர் உள்ளம் குளிர்வதும் எப்போ
எம் மண்காக்க இருந்திடு துணையாய்
சிந்தை நிமிர சீரெலாம் பெருக
வந்துமே காப்பாய் வடிவேற்கரசே.

மேனகா வேலாயுதம்

## துயரம் தீர்க்க வாராயோ!

வீரவே லாயுதனே வெற்றிமயில் வாகனனே
சூரசங் கார சுவாமி குருநாதா
கூருங் கருணைக் கடலே குணமலையே
பாரத் துயரம் பறிக்கவிங்கு வாராயோ!
ஐயா வரசே யமுதே யருள்சுரக்கும்
கையா றிரண்டுடைய கற்பகமே யிக்கலியில்
மெய்யான தேவே செவ்வேலா வுமைபாலா
செய்யா யிடும்பை கெடச் சீரருள் செய்யாயோ.

— புத்தொளி

### உதயவாக்கு

உண்மையான பக்தனுடைய மன நிலை செல்வம், புகழ் எல்லாவற்றையும் தூரத் தள்ளிவிட்டு இறைவனைச் சரணடைகின்றது.

— பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்



## என் குருவைக் கண்டேன்

பழம்பாக்கு வெற்றிலை பச்சரிசி தேங்காய்
இளநீர் தேனேந்தி யெழிலார் — அளவிலா
மங்கையரு மாடவருமல்கு நல்லூர்த் தேரடியில்
எங்குருவைக் கண்டேன் இனிது.

— யோகர் சுவாமிகள்

## நாளை

ஆவணி 11
சனிக்கிழமை
திதி: துதியை
பின் இரவு 4.18 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
பின்னிரவு 1.25 வரை
சுபநேரம்: 3.05—4.35
ராகுகாலம்: 9.05—10 35
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி

# வழங்கப்பட்டவர்களின் விவரம்

நல்லூர்

ஆர். புஸ்பராணி (108836 ஏ), ஆர். பிரதீப் (108836 பி), ஜி. ஸ்ரீகாந்தன் (108878 ஏ), எஸ்.உதயகலா (108878 பி), வி. சிவனேசன் (108949 ஏ), கே. சிவனேசன் (108949 பி), எஸ். சிவசங்கர்(108949 சி).

எஸ். ஜெயதர்ஷினி (108949டீ), யு. இரத்தின கிருஷ்ணன் (08999 ஏ). எஸ். அமுதா (109069 ஏ), ஆர். யோகமூர்த்தி (109079 ஏ), டபிள்யு. ராஜயகுமார் (111722 ஏ), வி. சரோஜினி தேவி (111737 ஏ), வி. யதுஷன் (111737 பி), வி. அஜீதன் (111737 சி), ஏ. கந்தையா (111767 ஏ), பி. கோணேஸ்வரன் (111768 ஏ), பி. நாகேஸ்வரி (211768 பி), வி. இாத்தின பிரபாகரன் (111801 ஏ), வி. ரகுநந்தையர் (111801 பி).

ஏ. கற்பகம் (111803 ஏ), எஸ். சின்னம்மா (111832 ஏ). எஸ். சங்கரதாஸ் 111832 பி), வி. ராஜேஸ் வரக் குருக்கள் (111863 ஏ), வி. சாருமதி (111863 பி), என். விஜயரட்ணம் (111925 ஏ), எஸ். சூரி நிஜான் (111925 பி), எஸ். நிருஜன் (111925 சி), ரி. இரத்தினம்மா (111935 ஏ), ஜி. கமலநாதன் (111939 ஏ), பி. கேதீஸ்வரன் (11768 சி).

எம். சிவபாலன் (107986 ஏ), வை. பூலோகசிங்கம் (107756 ஏ), வை. தேவகி (107756 பி), வை. சுஜிலா (107756 சி). வை. சுஜேன் (107756 டி), யு. ஆறுமுகம் பிள்ளை (107758 ஏ), எஸ். தெய்வசீலன் (110068 ஏ), எஸ். தம்பித்துரை (110103 ஏ), எஸ். மதிரூபன்(110103 பி), எஸ். ஸ்ரீரஞ்சிதகுமார் (105246 ஏ), பி. சுப்பிரமணியம் (105247 ஏ), என். சிவராஜா (106113 ஏ), எஸ். சரோஜினிதேவி (106113 பி).

எஸ். செரூபி (106113சி), எஸ். ஜெரான் (106113 டி), கே. கனகமணி (108616 ஏ), கே. ஜே. ஜெயராஜா (108616 பி), பி. பூலோ கேந்திரராணி (111732 ஏ), ஏ. நாகம்மா (111733 ஏ), கே. ததீஜன் (112056 ஏ), எஸ். ஷோபாலகிருஷ்ணன் (112092 ஏ), எஸ். கஜேந் திரா (112156 ஏ), கே. சிவ குமார் (112798 ஏ), ஜி. சின்னத்துரை (112895 ஏ).

கரவெட்டி

எஸ்.எம்.சீ.எம்.அலோசியஸ் [104446 ஏ), எம். சஞ்சீவன் [104446 பீ],

தெல்லிப்பழை

ரீ. ராசமலர் [109098 ஏ], வீ. சின்னராஜா[112153 ஏ[, ஆர். மாலசிறி [112183 ஏ], எம், செபஸ்தியாம் பிள்ளை ]112200ஏ],கே.மார்க்கண்டு [112758 ஏ], எஸ். மார்க் கண்டு [112758 பீ], எஸ். பொன்னையா [112596 ஏ], எஸ்.தனலச்சுமி[112596பீ],

நெடுந்தீவு

டீ. ராமநாதன் [11588 ஏ,] ஏ, வைத்தியநாதன் [11588 பீ], வீ. கோமளம் [11588 சீ], பீ. காமாட்சி[11645ஏ], பீ. பரமேஸ்வரகுமார் [11645 பீ], ஜீ. பிறியுகா [11645 சீ], ஆர். தர்ம ரட்ணம் [11745 ஏ], ஆர். துரைசிங்கம் [11745 பீ], ரீ. ஏ. லீனஜி [11745 சீ],

கோப்பாய் தொடர்ச்சி

எஸ். ராகினி [109673 பீ]. ரீ. வைரமுத்து [109674 ஏ].

குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு விமானம் மூலம் பயணம் செய்ய கடந்த 19 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம் வருமாறு:-

சண்டிலிப்பாய்

எஸ். நடேசு [104206ஏ], ஆர்.கைலைரதன்[104307ஏ], எஸ். நடராஜா [104449ஏ], எஸ். மலையரசி[104449பீ], கே. சோமசுந்தரம் [108819 ஏ], எஸ்.திவாகரன்[108819 பீ],எல்.சிறிகரன்[108852ஏ]. எஸ். செல்வரட்ணம்[109023 ஏ], கே. அகிலன்[109064பீ],

ஐ. சிவகுமாரசிங்கம் [111721ஏ], ஏ. சந்திரராணி [111772ஏ], கே. சிவநேசன் [111807ஏ],எஸ்.பத்மராணி [111807பீ], எஸ்.சிவதாரணி [111807சீ], எஸ். பைரன வன்[111807டீ], என். கந்த சாமி[111811ஏ], ரீ.புலேந்தி ரம்[111866ஏ], கே.சண்முக ராஜா[111870ஏ], எஸ். சில் வியாமஞ்சு [111875ஏ],

எஸ். எஸ். சௌத்ரி (111875பீ), ஏ. ராசநாயகம் (111897ஏ), ஆர். மேரி றெஜினா (111897பீ), ஏ. சேனாதிராஜா (111945ஏ). வீ. பாத்திமா கிறேசி(111967 ஏ), ஏ. ஆர். விஜயகுமார் (111967பீ), ஆர். செல்வ ராஜா (112008ஏ), எஸ். நிரோஜ் (112008பீ), எஸ். ராசதுரை (106208பீ), எஸ் சந்ரமௌலிசன் (112115ஏ).

சீ. தயாநிதி (112115பீ), சீ. சிவமணிதா (112115சீ), சீ.கௌரிபாலன்(112115டீ), கே. சொர்ணலிங்கம்(112085 ஏ), எம். ஆர். மோகன்தாஸ் 112033ஏ), எஸ். பாலகிருஷ் ணன் (112032ஏ),ரீ.பரமேஸ் வரி (112067ஏ), ஜே. தர்ம லிங்கம் (112067பீ), பீ. ராஜேஸ்வரி (111916ஏ), கே. கந்தராசா (111974ஏ), ஜே. ஐயாத்துரை(108825ஏ)

எஸ். மகேஸ்வரி (112004 ஏ), பீ. பிரகலாத் (112018 ஏ),கே.பஞ்சாந்தன்(112018 பீ), பீ. விலாசினா (112018 டீ), எஸ். பரராஜசேகரம் (108750ஏ), எஸ். தேவேந் திரன் [105117ஏ], எஸ். ராஜேஸ்வரி [105117பீ], சீ. யோகேஸ்வரன் (112369 ஏ]. எம். சின்னத்தம்பி (112198ஏ], பீ. சபானந் தம் [105800ஏ).

எம்.மரியாம்பிள்ளை[112069 ஏ], கே. சதாசிவம் [106034 ஏ], கே. ராஜேஸ்வரி [106034 பீ], எம். ராசமலர் ]105990 ஏ], ஜே. எம். நீற்றா [105990 பீ], சீ. ஏ. ராசகுமார், [113206 ஏ], எவ். இளங்கோவன் [111937 ஏ], ரீ. கந்தசாமி 111353 ஏ], கே. மகாலிங்கம் [108660 ஏ], எம்.ஹேமலதா [108660 பீ], எஸ். வேலுப் பிள்ளை [11154 ஏ].

பீ. சிவநேசன்[102035 ஏ], எஸ். அற்புதமலர் [106003 ஏ], எஸ். நிர்மலாராணி [106003 பீ], ஆர். தயாபரன் [108902 ஏ], ஆர். சின்னப் பிள்ளை [108902 பீ], கே. கந்தையா [108990 ஏ], எஸ். கந்தையா [108990 பீ] ஜி. கந்தையா [108990 சீ], ஆர், செல்வரட்ணம் [111199ஏ], ஆர். ராசேந்திரம் [111728 ஏ].

ரீ. ரவிச்சந்திரன் (111802 (ஏ, ரீ.வைத்தி (111975 ஏ), வீ. அன்ரன் ஜோன்சோ (111990ஏ), ரீ.ஏ.பாலச்சந்தி ரன் (112026 ஏ), எம்.கே. பாலச்சந்திரன் (112026 பீ), பீ.ஏ.நிலாஜனி (112026 சீ), பீ.சீ.அன்ரனி (112026 டீ), எஸ்.பொன்னம்பலம்(112061 ஏ), எஸ்.புஷ்பமலர் (112061 பீ), எஸ். ராசரட்ணம் (112064ஏ).

வை.சுவர்ணமலர் (112118 ஏ), வை. தயாளபிரஷாந் (112118 பீ), என். எழில் மோகன் (112199ஏ), ஜே. எழில்மோகன் (112199 பீ), வீ.எழில்மோகன் (112199சீ), ஆர்.எழில்மோகன் (112199 டீ), ஆர். எழில்மோகன் (112199ஈ), எஸ். ரமணன் (112309பீ), கே. செல்வ ராஜா (112786ஏ), எஸ்.தவ தாசன் (112790ஏ).

எஸ். வை. நெல்சன் (112790பீ), கே. கனகசபா பதி (112809ஏ), ஜே. செல் வநாயகம் (112872ஏ), கே. கதிர்காமநாதன் (112994 பீ), ஏ.அப்புத்துரை(113244 ஏ), எம். ரட்னேஸ்வரி (112178ஏ), எம். வனஜா (112178பீ), எம். அனுஷா (112178சீ), கே. மதியழகன் (112178டீ), கே. தர்மகுல சிங்கம் (111796ஏ),

ரீ. லிங்கேஸ்வரன்(111796 பீ),வீ.சின்னத்தம்பி (106037 ஏ),எஸ். உதயராஜ் (106037 பீ), எஸ்.சீ.மோகன்(108635 ஏ),ஜே.ராஜேஸ்வரி(111915 ஏ), டபிள்யூ. முருகேசு (106054ஏ), எம். சத்திய பாமா (106054பீ), எம். கிருஷ்ணராசா (106059ஏ), எம். கிருஷ்ணராசா )106059 பீ), கே. சிவசோதி (106059 சீ),

(தொடரும்)

## ஒடுங்கியவீதிகளில் சேவையில் ஈடுபட

## ஐந்து புதிய சிறிய பஸ்கள் வரும்

யாழ்ப்பாணம், ஓக.27

வட பிராந்திய போக்குவரத்துச் சபை அகலம் குறைந்த வீதிகளில் சேவையில் ஈடுபடுத்துவதற்கென 5 புதிய பஸ்களை யாழ்ப்பாணம் எடுத்துவரவுள்ளதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''டாட்டா 909'' ரக சிறிய பஸ்களே எடுத்துவரப்படவுள்ளதாகவும்—

அவை வடமராட்சி கிழக்கு மற்றும் வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப் பகுதிகளில் உள்ள அகலம் குறைந்த வீதிகளில் சேவையை ஆரம்பிக்கப் பயன்படுத்தப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை—

ஏற்கனவே கொழும்பிலிருந்து யாழ். எடுத்துவரப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட புதியரக பஸ்கள் பல அவற்றுக்கான உபகரணங்களைப் பெற முடியாத நிலையில் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-7]

## யாழ். பல்கலைக் கழகத்துக்கு 'ஓவ்செற்' அச்சு இயந்திரம்

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ். பல்கலைக் கழகத்திற்கு 'ஓவ்செற்' அச்சுயந்திரம் ஒன்று கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட உள்ளது.

சுமார் 6 லட்சம் ரூபா செலவில் இந்த அச்சியந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இயந்திரம் வந்து சேர்ந்ததும் பல்கலைக் கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களது உள்ளக வெளியீடுகள் பரீட்சை வினாத்தாள்கள், பாடக் குறிப்புகள் என்பனவற்றை இதன் மூலம் அச்சிட முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ-6)

## சாரதிகளுக்கான வினைத்திறமைப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக. 27

வடக்கு—கிழககு மாகாண அரச சேவையில் உள்ள சாரதிகளுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ். குடாநாட்டில் உள்ள பல்வேறு அரச திணைக்களங்களில் பணிபுரியும் 13 சாரதிகள் இப்பரீட்சையில் தோற்றினர்.

1989 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் இப் பரீட்சை நடைபெற்றுள்ளது இதன் காரணமாக கடந்த பத்து வருடங்களுக்குமேலாக அரச சாரதிகளுக்கு வழங்கப்படாத வருடாந்த சம்பள உயர்வை சாரதிகள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-7)

## மயிலங்காடு பகுதியில் 32 வீடுகள் அமைக்கப்படும்

வலிகாமம் தெற்கு, ஓக. 27

'ஜன உதாவ' திட்டத்தின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மயிலங்காடுப் பகுதியில் 45 பரப்புக் காணியில் 32 வீடுகள் அமைக்கப்பட உள்ளன.

வீடமைப்பு அதிகாரசபையினரின் உதவியுடன் இவ் வீடுகள் அமைக்கப்படும்.

இவ் வீடுகளைக் கட்டுவதற்குத் தேவையான பணத்தினை வீடமைப்பு அதிகாரசபை நான்கு கட்டங்களாக வழங்கும் என வீடமைப்பு அதிகார சபையின் உதவிப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

மேலும் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஜி.ரி.இசற் திட்டத்தின் கீழ் தாவடி தெற்கு, உடுவில் மத்தி, உடுவில் தென் கிழக்கு, மயிலங்காடு ஆகிய பிரிவுகளில் வீடுகள் அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. [ஐ-152

## ஞானச்சுடர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை ஆவணி மாத 'ஞானச்சுடர்' சமய சஞ்சிகை வெளியீட்டு வைபவம் நடைபெறும்.

இச் சஞ்சிகையின் வெளியீட்டுரையை கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திருமதி சுரேந்திரநாத் நிகழ்த்துவார். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சிவஸ்ரீ சோமதியாக சோமஸ்கந்தராஜா க்குருக்கள் மதிப்புரை நிகழ்த்துவார்.

[ஐ-173-30]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 | 21 |
| — | — |
| 03 | 07 |
| — | — |
| 1924 | 1999 |

அமரர் **நன்னித்தம்பி தம்பியப்பா**

(இளைப்பாறிய ஊழியர், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை)

சிறந்த பண்புகளுடன் அன்பின் சிகரமென வாழ்ந்து எங்களுக்கு வழிகாட்டியாகவும் துணைவருமாகவிருந்த என் அன்புக்கணவர், எங்கள் அன்புத் தந்தை, எங்கள் அன்பு மாமனார், எங்கள் அன்புப் பேரன், எங்கள் அன்புப் பூட்டன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பிறாளை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

(68506)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சர்வதேச மத்தியஸ்தத்தை ஏற்பதன் மூலமே 2 ஆயிரமாம் ஆண்டிலாவது சமாதானம் மலரும்

## ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் அணி அறிக்கை

கொழும்பு, ஓக. 26

இன்றைய சூழ்நிலையில் சர்வதேச மத்தியஸ்தத்தைத் தொடர்ந்து நிராகரிப்பதை நிறுத்திவிட்டு அதை ஏற்றுக் கொள்வதன் மூலமே 2 ஆயிரமாம் ஆண்டிலாவது சமாதானத்தைக் கொண்டுவர முடியும் என்பதை அரசாங்கம் உணரவேண்டும். இது எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோருவதை விட முக்கியமானது என்று ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் அணியின் பொதுச் செயலாளரும், மேல்மாகாண சபை உறுப்பினருமான மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது: 2 ஆயிரமாம் ஆண்டில் சமாதானத்தைக் கொண்டுவருவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளினதும், எதிர்க் கட்சிகளினதும் ஒத்துழைப்பைக் கோரி ஜனாதிபதி தனது அரசாங்கத்தின் 5ஆம் ஆண்டு நிறைவு விழாவில் பேசியுள்ளார். இந்த அரசாங்கம் 1994 இல் எந்த விலை கொடுத்தாவது சமாதானத்தைக் கொண்டு வருவோம், யுத்தத்தை நிறுத்திக் காட்டுவோம் என்று கூறி அதற்காக மக்களின் ஆணையைப்பெற்றது ஆனால் கடந்த 5 வருடங்களில் யுத்தம் நிறுத்தப்படாதது மாத்திரமின்றி அது முன்னரை விட தீவிரமாக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் வரலாறு காணாத அளவிற்கு நடைபெற்றுள்ளன. மறு பக்கத்தில் காலத்திற்குக் காலம் திடீர் திடீரென அரசியல் தீர்வு என்றும், அரசியல் பொதி என்றும் பேசப்படுவதைத் தவிர உருப்படியாக எதுவுமே நடைபெறவில்லை.

இந்நிலைமை இப்படியிருக்க தனது ஆட்சிக்காலத்தின் இறுதி ஆண்டில் அடியெடுத்து வைத்த நிலையில் மீண்டும் அரசியல் பொதி பற்றியும், அதற்கான எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பைக் கோரியும் அரசாங்கம் பேசுவது வேடிக்கையான விடயமாகும். எந்த ஒரு அரசாங்கமும் தனது ஆட்சிக் காலத்தின் முற்பகுதியிலேயே மிக அதிகமான மக்கள் செல்வாக்கைக் கொண்டிருக்கும். இந்த காலகட்டத்திலேயே இந்த அரசாங்கம் தனது அரசியல் தீர்வுப் பொதி சட்டமூலங்களை நாடாளுமன்றத்திலும், மக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பிற்கும் சமர்ப்பித்திருக்க வேண்டும், அந்த நேரங்களில் யுத்த நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி சமாதானத்திற்கான அனைத்து வாய்ப்புக்களையும் நழுவவிட்டுவிட்டு இன்று சமாதானம் பற்றி பேசுவது நடைமுறைக்கு சாத்தியப் படக்கூடியது அல்ல,

இலங்கையின் வரலாற்றில் பெரும்பான்மை தேசிய கட்சிகள் ஆட்சியிலிருக்கும் போது ஒன்றும் எதிர்க்கட்சியில் இருக்கும் பொழுது வேறொன்றும் பேசிவருவது புதியதல்ல. இந்த பெரும்பான்மை தேசிய கட்சிகளின் அரசியல் சித்து விளையாட்டுக்களின் காரணமாகத்தான் வடக்கு—கிழக்கிலே இன்று ஆயுதப்போராட்டம் நடைபெறுகின்றது. இந்நிலையில் ஒரு தேர்தல் ஆண்டின் போது இன்றைய அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி எங்ஙனம் ஒத்துழைப்புத் தரும்?

அதேவேளை தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடும்படி நிர்ப்பந்திக்க வேண்டுமென அரசாங்கம் தொடர்ந்து கூறிவருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்படுவதற்காக ஒரு முழுமையான சமாதானத்திட்டம தென்னிலங்கையிலே உருவாக்கப்படவில்லை. இங்குள்ள கட்சிகள் மத்தியிலே குறைந்தபட்ச ஒருமித்த கருத்தும் இல்லை. பேரினவாத சக்திகள் மீண்டும் தலைதூக்க தாராளமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது, பல்வேறு நாட்டு அரசாங்கங்கள் முன்வைத்த சர்வதேச மூன்றாந்தரப்பு யோசனையை இலங்கையின் வெளிநாட்டமைச்சர் தொடர்ந்து நிராகரித்து வருகின்றார். நிலைமைகள் இப்படியிருக்க தமிழ்மக்கள் எதைப்பற்றி பேசுவதற்கு எந்த அடிப்படையிலான நிர்ப்பந்தத்தை தமிழ்ழ விடுதலைப் புலிகள் மீது செலுத்த முடியும்? —

என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பயிற்சி

சண்டிலிப்பாய், ஓக 27

சங்கானை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் கெயர் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் பண்ணையாளர்களுக்கான குறைந்த வெளி உள்ளீட்டு தொழில்நுட்ப பயிற்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கானை—சண்டிலிப்பாய் வீதியிலுள்ள சங்க அலுவலக மண்டபத்தில் சங்கத் தலைவர் ச. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும்.

(இ-135)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.27

அமரத்துவம் அடைந்த டாக்டர் சொர்ணலிங்கத்தின் இரங்கற்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தில் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் செ. தவராசா தலைமையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் கலைஞர் கொக்கையம்பதி மு. வை. செ. பாலசுப்பிரமணியம், வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ. கமலநாதன், உடுவில் உதவிக் கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றுவர்.

[ஐ-3]

## விவசாயபீட பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ். பல்கலைக் கழகவிவசாய பீடத்தின் 1996 ஆம் ஆண்டு மாணவர்களது இறுதிப்பரீட்சைப் பெறுபேறுகள் பல்கலைக்கழக பரீட்சைகள் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ளன.

2 ஆம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:

ஜே.கலைச்செல்வன், என். சுதர்மன், பி.இளங்கோவன், ஜி. திருக்குமரன், எம். சிவனேசன்.

2 ஆம் வகுப்பு கீழ்பிரிவில் சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:

என். கமலதாஸ், வி பிரபாகரன், எஸ். விசாளினி, எஸ். கார்மலேற்றாறியலினி.

(ஐ-6-9)

## பத்திரிகை மீதான தாக்குதலுக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், ஓக. 27

கடந்த சனிக்கிழமை இரவு 'உதயன்' பணிமனை மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலைக் கண்டித்து பல அமைப்புக்கள் தொடர்ந்தும் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. அவற்றில் சில வருமாறு:-

### மக்கள் சக்திக் கழகம்

''உதயன்'' பணிமனை மீது அண்மையில் நடத்தப்பட்ட கிரேனேட் தாக்குதல் பற்றிய எமது கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இதைப் பலரும் கண்டித்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது. இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இம்மண்ணில் இடம்பெற்ற சகல துன்பியல் நிகழ்வுகள் பற்றியும் துணிச்சலாக செய்திகளை வெளியிட்ட பெருமை உதயனைச்சாரும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் இடப்பெயர்வின் பின்பு —ஏப்ரல் 1996 மக்கள் தீவகம் மற்றும் வலிகாமம் பகுதிகளுக்கு மீண்டும் குடியமர்ந்த பின்னர்—நிலவிவரும் சூழ்நிலை ஒரு நிச்சயமற்ற மௌன ஜீரணிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சூழ்நிலையிலும் யதார்த்தமான, நியாயமான கருத்துக்களை அவ்வப்போது 'உதயன்' வெளியிட்டு வருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.

இப்படியான நிலையில் இடம்பெற்ற இத்தாக்குதல் சில முக்கிய விடயங்களை புலப்படுத்துகின்றது.

மக்கள் கருத்துருவாக்கத்தை எதிர்க்கும் அல்லது விரும்பாத சக்திகளே இத்தாக்குதலை மேற்கொண்டிருக்க வேண்டும். இது ஒரு சராசரி சமூக மனிதனால் அல்லது மனிதர்களால் நிகழ்த்தப்பட்டதாகவிருக்க முடியாது. ஏனெனில் இவ்வாறான ஆயுதங்கள் அவர்கள் கைக்கு கிட்டக்கூடிய சூழ்நிலை அநேகமாக இல்லை என்றே கொள்ளலாம்.

நியாயமான, நிதானமான, நேர்மையான அடிப்படை ஜனநாயகத் தன்மையாவது இந்தமண்ணில் உருவாகிதொடர வேண்டியது அவசியம். அதற்கான உதயனின் பணி மகத்தானது. இந்தக் கோணத்தில் செயற்படுபவர்களுக்கும் உதயனுக்கும் ஆதரவாகவும் பாதுகாப்பாகவும் இருப்பது மக்களின் பொறுப்பும் கடமையுமாகும்.

பத்திரிகைகளின் எல்லாக் கருத்துக்களுடன் உடன்படாதவர்கள் நிச்சயமாக இருக்கவே செய்வர். அவர்கள் யாராகவிருந்தாலும் கருத்துக்கு கருத்து என்ற வகையில் மக்கள்மன்றத்தில் தமது கருத்துக்களை முன்வைத்து வாதாடலாமே தவிர பத்திரிகைச் சுதந்திரத்தை பயமுறுத்தும் வகையில் நடந்து யாழ். குடாநாட்டின் ஒரேயொரு கணிசமான நடுநிலைப் பத்திரிகை ஒன்றை அச்சுறுத்துவது தவறானது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

### தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் தமிழர்களின் தேசிய குரலாக வெளிவரும் 'உதயன்' மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலானது ஜனநாயகக் கருத்துக்களை துணிச்சலுடன் வெளியிடுபவர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே கருத வேண்டியுள்ளது.

குடாநாட்டின் தமிழ் எழுத்தாளர்கள் தமது மண்ணின் பெருமையையும், தமிழர்கள் அனுபவித்து வரும் பல்வேறு வகையான துன்பங்களையும் 'உதயன்' மூலம் வெளிப்படுத்தி மொழிச் சுதந்திரத்துக்காகப் பாடுபடும் வேளையில் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது.

தமிழர்களின் விடிவுக்காகப் போராடும் சகலரும் இக்குண்டுத்தாக்குதலைக் கண்டிக்க வேண்டும். தொடர்ந்தும் தமிழர்களின் சுதந்திரத்துக்காகவும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும் உதயன் பாடுபட வேண்டும். அதற்கு இறைவனது ஆசி என்றும் கிடைக்கும்.

## 2 ஆயிரம் நுளம்பு வலைகள் 'யுனிசெவ்' அன்பளிப்பு

தென்மராட்சி, ஓக. 27

வன்னியிலிருந்து சொந்த இடங்களுக்கு திரும்பியோரில் மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு வழங்கவென 2 ஆயிரம நுளம்பு வலைகளை 'யுனிசெவ்' நிறுவனம் வழங்கியுள்ளது.

இவற்றில் 250 நுளம்புவலைகள் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கும் ஏனைய ஆயிரத்து 750 நுளம்பு வலைகள் யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் ஊடாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சின் பிரகாரம் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட உள்ளன.

(ஐ-117)

## சந்நிதியான் தேர் திருவிழாவில் பக்தர் திரள்

வடமராட்சி, ஓக. 27

பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில் ரதோற்சவம் நேற்று முன் தினம் நடைபெற்றபோது பெருந்திரளான அடியார்கள் கலந்து கொண்டு முருகப்பெருமானின் தரிசனம் பெற்றனர்.

குடாநாட்டிலிருந்து இ. போ. ச. மற்றும் மினிபஸ் வண்டிகளில் பெருந்திரளானோர் ரதோற்சவத்தில் பங்குபற்றுவதற்காக முதல் நாளே சந்நிதிக்கு வந்து குவியத் தொடங்கினர்.

ரதோற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியார்களுக்கு வசதியாக விசேட போக்குவரத்துசேவைகளை இ.போ. சவும், மினிபஸ் சங்கங்களும் மேற்கொண்டிருந்தன. அத்துடன் சுகாதார வசதிகளும் செய்யப்பட்டிருந்தன.

(ஐ-173)

## விளையாட்டு உபகரணம் வழங்கல்

நெடுந்தீவு, ஓக. 27

ஆஸ்திரேலிய அரசின் நிதிஉதவியின்கீழ் 'யுனிசெவ்' நிறுவனம் ஊஞ்சல், சீசோ, சதுர ஏற்றுச் சட்டம்போன்ற சிறுவர் பூங்காவிற்கான விளையாட்டு உபகரணங்களை நெடுந்தீவு [illegible] சமூக நிலையத்துக்கு வழங்கி உள்ளது.

(ஐ-111)

சாவகச்சேரி

**வேம்படி அம்மன் கோயில் திருப்பணி நிதிக்காக**

யாழ். அரியாலையூர்

சாரங்கா இசைக்கலைஞர்களின்

**மாபெரும் இன்னிசைகானங்கள்**

இடம்: சாவகச்சேரி சிவன் கோயில் கலையரங்கு

காலம்: 28-08-99 சனிக்கிழமை பிற்பகல் 12. 30 மணி முதல்

பிரவேசம்: 20 ரூபா

பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் 50 ரூபா செலுத்தி பங்குபற்றலாம்.

— நிர்வாகி

வேம்படி அம்மன் கோயில்,
சாவகச்சேரி.

(68518)

**கண்ணீர் அஞ்சலி**

வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்க கிளை முகாமையாளர்

**சோமசுந்தரம் நடேசலிங்கம்**

அவர்கள் 26-08-99 அன்று இறைபதமெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சி அடைகின்றோம். அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் அவரது பாரியார், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்..

பணியாளர் தொழிற்சங்கம்,

வலி. கிழக்கு,
தென்பகுதி ப.நோ.கூ. சங்கம்,
நீர்வேலி.

(சி/8661)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சிலுவை...

(முதலாம் பக்கத் தொடர்)

காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் தமது சார்பில் ஆஜராக விருப்பம் தெரிவித்திருக்கும் குமார் பொன்னம்பலத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் யாழ். அழைத்து வருவது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதியிடம் தொடர்புகொண்டு கேட்டுள்ள வேளையில் இந்தத்தகவல் வெளிவந்துள்ளது.

அவசர நோயாளர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மட்டுமே செஞ்சிலுவை சர்வதேசக்குழுக் கப்பல் மூலம் பயணம் செய்யலாம் என்பதே பொது விதியாகும் எனவும்—

எனவே செஞ்சிலுவை சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் குமார் பொன்னம்பலத்தை யாழ். அழைத்து வரமுடியாத நிலையுள்ளதாகவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-7)

## 20 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரஸ்தாப பெண்ணைக் கைது செய்ததாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

வெடிகுண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து மேலும் தேடுதல்களை நடத்த மேலதிக பொலீஸார் மடுல் சீமைக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது, (இ-7)

**A. V. M. ராஜன், புஸ்பலதா**
**குழுவினர் பங்குபற்றும்**
மாபெரும் நிகழ்ச்சி
**அன்பு வெள்ளம்**
இடம்: உடுவில் மகளிர் கல்லூரி மைதானம்
இன்று (27-8-99) மாலை 3 30 (புதிய நேரம்)
பிரவேசம் இலவசம்
நாளை முதல்
யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்,
வட்டுக்கோட்டை.
(சி/8312)

**SPOKEN ENGLISH**
with
**GRAMMAR**
Lectures by: **Mr. M A. HARI**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
05-09-99 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணி
Saturday / Sunday - 2.00 p.m — 3.00 p m
★ பிரிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.
**நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.
(68517)

**வலிகாமம் மக்களின்**
**வைத்திய சேவைக்கு**
**கொக்குவிலில்**
எமது கிளை ஸ்தாபனம்
**Dr. சொர்ணலிங்கம் வைத்தியசாலை**
ஆரம்பம்: இன்று (27-08-99) வெள்ளிக்கிழமை
★ வெளி நோயாளர் பிரிவு ★
மாலை 4.00 - 7.00 மணி வரை
(M. B. B. S வைத்தியர்களினால்)
எமது ஸ்தாபனத்தின் வைத்திய நிபுணர் சேவைக்கான முன் பதிவுகளை பின்வரும் இடங்களில் மேற்கொள்ளலாம்.
▶ Dr. S. S. அருளானந்தம் (வதனா மருந்தகம்)
தனங்களப்பு வீதி, சாவகச்சேரி.
▶ Dr. சொர்ணலிங்கம் வைத்தியசாலை
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.
* வெளிநோயாளர் பிரிவு
* உள்ளக நோயாளர் பிரிவு
* வைத்திய நிபுணர் ஆலோசனைப் பிரிவு
* ஆய்வுகூட E. C. G. வசதி
**யாழ். வைத்திய நிலையம்**
166, முதலாம் குறுக்குத் தெரு,
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)
யாழ்ப்பாணம். (68515)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27 - 08 - 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ரெலோ மீதான தாக்குதல் ஈ.பி.ஆர்.எல்.எவ். கண்டனம்

கொழும்பு, ஒக. 27

வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் அமைந்திருந்த ரெலோ முகாம் மீது நேற்று முன்தினம் அதிரடிப் படையினர் நடத்திய தாக்குதலை ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ரெலோ அமைப்பின் வவுனியா, உக்கிளாங்குளம் முகாம் மீது நேற்று முன்தினம் காலை படையினர் இரண்டாவது தடவையாக தாக்குதல் நடத்தி உள்ளனர். இந்தத் தாக்குதலில் 5 ரெலோ உறுப்பினர்களும் இரு அப்பாவிச் சிறுவர்களும் காயமடைந்துள்ளனர். ஒரு குழந்தை மரணித்தும் உள்ளது.

தமது காவலரண் மீது யாரோ இனந்தெரியாத ஒருவர் தாக்குதல் நடத்தியதற்காக ரெலோ முகாமையும் அப்பாவிச் சிறுவர்களையும் தாக்குவது மனிதாபிமானமற்றதும் கண்டிக்கத்தக்கதுமான செயலாகும்.

வடக்கு - கிழக்கில் பல தமிழ் இயக்கங்களின் பல அலுவலகங்களும் முகாம்களும் உள்ளன. இந்த நிலையில் யாரோ இனந்தெரியாதவர்கள் புரியும் வன்செயல்களுக்காக தமிழ் இயக்கங்களின் அலுவலகங்கள் தாக்கப்படுமானால் குறைந்தபட்ச ஜனநாயகம் தோன்றுவதற்கான அடித்தளம் கூட அங்கு இல்லாது போய்விடும்.

ஐயப்பாடு வரும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து விசாரிப்பதே நல்லது. அதற்காக முகாமை எரித்து நாசமாக்குவதும், கண்மூடித்தனமாக சுட்டுத் தள்ளுவதும், இதனால் அப்பாவிகள் மரணமாவதும் வேதனைக்குரிய சம்பவங்கள் —என்றுள்ளது. (இ-6)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றக் கூட்டத்தின் பின்னர் பத்திரிகையாளர்கள் இது பற்றிக் கேட்டபோது தமக்கு இதுபற்றி எதுவும் தெரியாது என்று ரணில் விக்கிரமசிங்க பதில் அளித்திருந்தார்.

அரசுக்கும் பிரதான எதிர்க் கட்சியான ஐ. தே. கவுக்கும் இடையில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்த மாத இறுதிக்குள் உடன்பாடு ஒன்றை எட்டச் செய்யும் — வர்த்தக சம்மேளனத்தின் — முயற்சிகளுள் ஒன்றாக இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவருக்கு நான்கு கடிதங்கள் எழுதிவிட்டதாகவும் ஆனால் சந்திப்பு பற்றி உறுதியான பதில் கிடைக்கவில்லை என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

அரசின் தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் எதிர்க்கப் போவதாக அறிவித்துள்ள பட்சத்தில் அமைச்சர் பீரிஸுடன் ரணில் பேச்சு நடத்துவது அர்த்தமற்றது என்று ஐ.தே.க. வட்டாரங்கள் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

ENGLISH-TAMIL
**TYPEWRITTING**
and
**SHORTHAND**
CLASS
NEW BATCHES
Start on:
1 st SEPTEMBER
1999
★ Students who Complete these courses successfully will be given the opportunity of obtaining training in the COMPUTER in WORD PROCESSING
For Further Details Contact:
– DIRECTOR,
IIS,
No. 100,
Clock Tower Road,
Jaffna.
(C/8664)

# நாவலர் விளையாட்டுக்கழக ஆண்டு விழா

வடமராட்சி ஒக 27

தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகத்தின் 26 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் கணக்கிலாவத்தை சித்திவிநாயகர் ஆலய விளையாட்டரங்கில் கழகத் தலைவர் எஸ்.பி.விவேகானந்தன் தலைமையில் நடைபெறும்.

நாளை இடம்பெறும் முதல் நாள் நிகழ்வில் மென் பந்து துடுப்பாட்டச்சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி நடைபெறும்.

இந்தப்போட்டியில் அல்வாய்தெற்கு கலைமகள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதும்.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் 2 ஆம் நாள் நிகழ்வில் அமரர் வி. ஏ. கிருஷ்ணராஜா ஞாபகார்த்த சுழல் கேடயத்துக்காக நடைபெறும் துடுப்பெடுத்தாட்டப் போட்டியில் தும்பளைநாவலர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இறுதிப்போட்டியில் வெற்றியீட்டும் கழகம் மோதும்.

இரண்டாம்நாள் நிகழ்வுக்கு இலங்கை வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் கே. பாலசுப்பிரமணியம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-173)

## தென்மராட்சிப் பிரதேசத்தில்

# அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிவரத் தடை

தென்மராட்சி, ஒக. 27

தென்மராட்சிப் பிரதேசத்தில் அனுமதிப் பத்திரமின்றி மணல் கொண்டு செல்வதற்கு பிரதேச செயலரினால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மணல் ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரம் பிரதேச செயலகத்தினால்வாரத்தில் திங்கள், வியாழன் ஆகிய தினங்களில் வழங்கப்படுமெனவும் —

மணல் கொண்டு வருவதற்கு வழிக் கட்டணமாக உழவு இயந்திரப் பெட்டிக்கு 75 ரூபாவும் லொறிக்கு 190 ரூபாவும் செலுத்தப்பட வேண்டுமெனவும் —

சனி, ஞாயிறு தினங்களில் மணல் கொண்டு செல்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது எனவும் —

பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ-117)

**புலமைப்பரிசில் 99**
பிரிவு II க்கான
**பதிவுகள்**
99 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் செப்ரெம்பர் மாத பிரிவுக்கான பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன. இதுவரை பதிவு செய்து கொள்ளாத மாணவர்கள் அனைவரும் உடனடியாகத் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்.
— இயக்குநர்,
IIS, இல. 100,
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/8665)

# வயாவிளான் மகாவித்தியாலய கலை விழா

கொக்குவில் ஒக. 27

இடம்பெயர்ந்து உரும்பிராயில் இயங்கிவரும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் கலைப்பெருவிழா உரும்பிராய் கலை அரங்கத்தில் நாளை சனிக்கிழமை பி.ப. 2-30 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பெருந்தெருக்கள் அதிகார சபையின் பிராந்தியப் பொறியியலாளரும் உரும்பிராய் லயன்ஸ் கழகத் தலைவருமான இ. நடராஜா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் க. நாகராஜா கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் மேற்படி பாடசாலையின் ஆசிரியர்கள் பங்கேற்கும் ''அக்கரைப் பச்சை''என்னும் நகைச்சுவை நாடகமும் மாணவர்களின் ''தாட்சாயணி கல்யாணம்'', ''சகுந்தலை'', ''நன்மை செய்த நாம்பன்'' போன்ற நாடகங்களும் இடம்பெறவுள்ளன. [இ-69]

## சர்வமத...

(முதலாம் பக்கத் தொடர்)

கலைக்கழகத்தில் நடைபெற உள்ளன.

யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்றைய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பல்வேறு சமயத் தலைவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும், பொதுமக்களும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org